# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| மாலை 1 | ஞாயிறு 22-1-39 வெகுதான்யஹூ தைமீ 9உ | முத்து 17 |
|---|---|---|

## பொருள் அடக்கம்


விஷயம் — பக்கம்

1. பர்தோலி சந்திப்பு ... 434
2. பிற்போக்கின் உச்ச நிலை ... 434
3. குறிப்பு ... 435
4. போகிற போக்கில் ... 437
5. வார நடப்பு ... 440
6. "எங்கள் நாடு" (வே. ரா.) ... 441
7. நாணயச் செலாவணி (ஸ்ரீ. ஆர். ஸ்ரீனிவாசய்யர், ரிடயர்ட் அக்கௌண்டண்ட் ஜெனரல்) ... 442
8. மின்னலும் இடியும் (ஸ்ரீ. ஆர் கே. விஸ்வநாதன் பி. ஏ. (ஆனர்ஸ்) ... 444
9. "ராணுவபலம் நமக்கேது ?" (ஸ்ரீ. என். ஆர். சுப்ரமண்யம் பி. ஏ., பி. எல்.) ... 447
10. சின்னம்மாள் (ஸ்ரீ. ஆ. வே. ஜெயராமன்) ... 449
11. நாகன் (ஸ்ரீ. பி. கோதண்டராமன் எம். ஏ., பி. எல்.) ... 453
12. சகுனம் (ஸ்ரீ. கே. வெங்கடராமன் பி. ஏ.) ... 457
13. இலக்கியக் கட்டுரை (ஸ்ரீ. கி. வா. ஜகன்னாதன்) ... 459
14. சிறுவர் பகுதி (ஸ்ரீ. எஸ். எல். நாராயணன் பி. ஏ.) ... 461
15. வலை வீச்சு ... 462


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,



# பர்தோலி சந்திப்பு

பர்தோலி, இந்திய சுதந்திரப் போரின் சரித்திரத்தில் பெயர்பெற்றுவிட்டது. சத்தியாக்கிரகத்தின் சக்தி பர்தோலியில் ஸ்தாபனமாயிற்று. பர்தோலியில்தான் மகாத்மா காந்தி, ஒரு இணையற்ற நெருக்கடி காலத்தில், ஒத்துழையாமை இயக்கத்தைக் கையமர்த்தி நிறுத்தினார். அந்த இடத்தில் இந்த வாரம் மகாத்மாஜியும் அகாகான் அவர்களும் சந்தித்துப் பேசினார்கள். ஹிந்து முஸ்லீம் பிரச்னை இப்பொழுது பழுத்து தீர்ப்பு பெறும் தருணம் கொண்டுவிட்டது. இதற்கு முன் அதைத் தீர்க்கவேண்டி செய்த பல முயற்சிகளும் வீணாகப் போய் விட்டன. சரியான சமயம் பார்த்து காந்திஜி மறுபடியும் அதைத் தீர்க்க முன்வந்திருக்கிறார். அதற்கேற்றாற்போல முஸ்லீம் உலகத்துத் தலைவரான அகாகான் அவர்களும் இங்கு வந்து பர்தோலி சென்று அவரைச் சந்திக்க இசைந்தது ஒரு சுப சூசகமாகும்.

இது ஒரு சரித்திர சந்திப்பு. இதிலிருந்து பெரும் பலன்கள் ஏற்படக்கூடும். காந்திஜியின் திட்டத்தை அகாகான் ஒப்புக்கொண்டுவிட்டதாகக் கூட சொல்லப்படுகிறது.

காந்திஜியின் திட்டம் சமரஸத்தை உத்தேசித்து ஹிந்துக்களின் உரிமைகளை மிகவும் விட்டுக்கொடுக்கும் முறையிலேயே அமைந்திருக்கிறது. முஸ்லீம்கள், ஹிந்துக்கள் கண் காணாமல் பசுக்களைக் கொல்லலாம்; ஹிந்துக்களின் மனம் தவிக்கும்படி தெரு வழியே மாடுகளை இழுத்துக்கொண்டு போகக்கூடாது. மசூதிகள் இருக்கும் தெருக்கள் வழியாக ஹிந்துக்கள் வாத்தியங்கள் வாசித்துக்கொண்டு போகலாம். ஆனால் மசூதியில் இருப்பவர்கள் நிஷ்டை கலையும்படியாக எதிரே நின்றுகொண்டு முழங்கக்கூடாது. மற்றபடி மத விஷயங்களில் அவரவர்கள் முறையை அனுசரிக்க இரு வகுப்பினருக்கும் உரிமையுண்டு. இப்பேர்ப்பட்ட ஒரு திட்டத்திற்கு முஸ்லீம்கள் ஆட்சேபிப்பதற்கு இடமே இல்லை.

இதை முஸ்லீம்கள் ஏற்றுக்கொண்டு காங்கிரஸுடன் ஒத்துழைத்து சமஷ்டியை எதிர்த்துப் போராடவேண்டியது மிகவும் அவசியம். அப்படிச் செய்யத் தவறினால் நெருக்கடி சமயத்தில் முஸ்லீம்கள் நாட்டை விட்டுக்கொடுத்தவர்கள் ஆவார்கள்.

ஹிந்து முஸ்லிம் பிரச்னையைத் தவிர சமஷ்டியைப் பற்றியும் இரண்டு தலைவர்களும் பேசினார்களோ என்னமோ? அகாகான் சாம்ராஜ்ய தூதரோ? காந்திஜியிடம் சமரஸம் பேச வந்தாரோ?

---

# பிற்போக்கின் உச்ச நிலை

தலைவர்கள் நாட்டில் ஒற்றுமை ஏற்படுத்த எதை வேண்டுமானாலும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள். காந்திஜி இரவும் பகலுமாக அதைப்பற்றி யோசித்து திட்டம் போட்டு அகாகான் அவர்களைச் சந்தித்துப் பேசுகிறார். இந்த தருணத்தில் அபஸ்வரம் போல ஸர் மகமது யாகுப் முஸ்லீம்கள், இந்தியாவில் ஒரு வகுப்பினர் அல்லவென்றும் முஸ்லீம் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதி யென்றும் ஒரு பிரிவினைப் பாட்டைப் பாடுகிறார். முஸ்லீம்களானாலும் ஹிந்துக்களானாலும் முதலில் இந்தியர்கள்; இதை ஸர் மகமது ஆட்சேபிப்பது விபரீதமாக இருக்கிறது.

(436-ம் பக்கம் பார்க்க)

குறிப்பு

# 'தாஜா' செய்யும் திட்டம்

சுதேச சமஸ்தானங்களுக்கு மட்டும் போய் வைஸ்ராய் சுற்றுப்பிரயாணம் செய்வதென்று போட்டிருக்கும் திட்டத்தில் அர்த்தமிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. லின்லித்கோ பிரபுவிற்கு இப்பொழுது சமஷ்டியைப்பற்றித் தான் இரவும் பகலும் ஞாபகம்; கனவிலும் நினைவிலும் அதைப்பற்றித்தான் அவர் கலங்கு கிறார். இலங்கை வேந்தன்கூட அப்படிக் கலங்கவில்லையென்று சொல்லிவிடலாம். பிரிட்டிஷ் பிரதேசங்களில் பெருவாரியான மாகாணங்களில் காங்கிரஸ் சர்க்கார் பதவியில் இருந்துகொண்டு சமஷ்டியை எதிர்க்கிறது. சுதேச மன்னர்களோ இடக்குக் குதிரைகள் போல சமஷ்டிக்குள் கொஞ்சத்தில் நுழைய சம்மதிக்கமாட்டோமென்கிறார்கள். பிரிட்டிஷ் சர்க்காரோ விடாப்பிடியாக திட்டத்தை மாற்றமாட்டோம் என்கிறார்கள். நடுவில் லின்லித்கோ பிரபு அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறார். என்ன செய்வார் பாவம்! சமஷ்டியை எப்படியாவது கொண்டுவந்து அமுலை நடத்தவேண்டுமென்பது அவருக்கு உத்தரவு. எந்த ராஜப் பிரதிநிதிக்கும் இந்தமாதிரியான கலக்கமான நிலைமை இருந்ததில்லை யென்று சொல்லலாம். சமீபத்தில் காங்கிரஸை நல்ல வார்த்தை சொல்லி சமஷ்டியைப் பரீட்சை செய்து பார்க்கும்படி கேட்டுக்கொண்டார். இப்பொழுது சுதேச சமஸ்தானங்கள் மற்றொரு பக்கம் இழுக்காமல் இருப்பதற்காக அவற்றைத் 'தாஜா' செய்வதற்காக வெளிக் கிளம்பி இருக்கிறார். 'முயற்சி திருவினையாக்கும்' என்ற பழமொழியில் லின்லித்கோ பிரபுக்கு நிரம்ப நம்பிக்கையுண்டுபோலிருக்கிறது.

ஆனால் அவர் சமஸ்தானாதிபதிகளுக்குச் செய்யும் உபதேசம் எந்தமாதிரியானது என்பது தெரியவில்லை; பிரஜைகளுக்கு ஓரளவு பிரதிநிதித்துவமும் உரிமைகளும் கொடுத்து வரும்படி வைஸ்ராய் அவர்களுக்கு உபதேசம் செய்தால் நல்லது. அவர் பிரயாணம் வீண் என்று சொல்ல முடியாது.

## சிந்துவில் காங்கிரஸ்

தான் மேலே ஏறின ஏணியையே உதைத்துத் தள்ளிவிட்டார் சிந்து பிரதமமந்திரி ஸ்ரீ அல்லாபக்ஷ். முதல் நம்பிக்கையில்லாத தீர்மானம் வந்தபோது லீக்கின் பலம் சிந்துவில் அதிகமாக இருந்தது; ஆகையால் பிரதம மந்திரி காங்கிரஸ் நிர்வாகத்திடம் ஓடிவந்து சமரஸம் செய்து கொண்டுபோய் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு பெற்று உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொண்டார். இப்பொழுது சிந்துவில் லீக்கின் பலம் குன்றிவிட்டது. எதிர்க் கட்சித் தலைவரே அதிலிருந்து விலகிவிட்டார். ஆகையால் இனிமேல் காங்கிரஸ் கட்சியின் தயவு வேண்டியதில்லை என்ற எண்ணத்தின் பேரிலோ என்னமோ, அல்லாபக்ஷ் காங்கிரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி நடந்துகொள்ள மறுத்துவிட்டார். ஆகையால் இன்று சிந்து அசெம்பிளி காங்கிரஸ் கட்சியின் நிலைமை அசடுதட்டினதாக இருக்கிறது. இனிமேல் காங்கிரஸ் சிந்துவில் எதிர்க்கட்சியில் தான் இருக்கவேண்டும் என்று டாக்டர் கிட்வானி சொல்லுகிறார். எப்படியானாலும் அல்லாபக்ஷ் தனது உத்தியோகத்திற்கு ஹானி இல்லாமல் செய்து கொண்டுவிட்டார். முறை எப்படியிருந்தால் என்ன?

## வங்காளத்தின் சமாசாரம் என்ன?

வங்காளத்தில் என்னமோ குமுறிக்கொண்டு இருக்கிறது. ஹக் மந்திரிசபை இன்னும் கவலையற்று இருக்க இடமேற்படவில்லை போலிருக்கிறது. இரண்டு பிரஜாக் கட்சி ஆசாமிகளை மந்திரிசபையில் சேர்த்துக்கொண்ட பிறகு கூட சில அங்கத்தினர்களுக்கு மனஸ்தாபம் நீங்கவில்லையாம். இதன் நடுவில் ஸ்ரீ நளினரஞ்ஜன சர்க்கார் வர்தாவிற்கு வந்து போனதைப்பற்றி வேறு ஹேஷ்யங்கள் இருக்கின்றன. சர்க்கார் என்னமோ காந்திஜியைப் பார்த்து வணங்கிவிட்டுப் போவதற்காகத் தான் வந்ததாகக் கூறுகிறார். எது எப்படியானாலும் காங்கிரஸ் இன்னும் வங்காளத்தில் கூட்டு மந்திரிசபை கூட ஏற்படுத்தமுடியாமல் இருப்பது வங்காள காங்கிரஸ் தலைவர்களின் செல்வாக்குக் குறைவைத் தான் காட்டுகிறது.

## இரண்டு நல்ல காரியங்கள்

சமீபத்தில் சென்னை சர்க்கார் இரண்டு உபயோகமான உத்தரவுகள் போட்டிருக்கிறார்கள். ஜில்லா கல்விக்கவுன்ஸில்களை எடுத்துவிட்டார்கள். இந்தக் கவுன்ஸில்கள் உபயோகமாக ஒருவேலையும் செய்யவில்லை. 1920-ம் வருஷத்திலிருந்து இந்த ஸ்தாபனங்

கள் 'அட்ஹாக்' கமிட்டிகள்போல இருந்து வந்திருக்கின்றன. ஆனால் இவற்றிற்கு வேலை யும் கிடையாது. அவைசெய்தவேலை பள்ளிக் கூடங்களை அனுமதிப்பதும், மானியங்கள் கொடுப்பதும் தான். இந்த வேலையை இலாகா உத்தியோகஸ்தர்களே செய்துவிட லாம். சர்க்கார் இவற்றை எடுத்துவிட தைரிய மாக முன் வந்ததற்கு நாம் அவர்களைப் போற் றுகிறோம்.

சர்க்கார் செய்திருக்கும் மற்றொரு சீர்திருத் தம் மிகவும் முக்கியமானது. இப்பொழுது சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பென்ஷன்வாங் கிக்கொள்ளும்பொழுது, பென்ஷனில் ஒரு பாகத்தை மொத்தமாக முன்பணமாகப் பெற்றுக்கொண்டு விடலாமென்று ஒரு வசதி இருக்கிறது. இதன் கீழ் சர்க்கார் மூலதனத் தில் பெருந்தொகை செலவாகிறது. சர்க்கார் இப்பொழுது இந்த வசதியை எடுத்துவிட் டார்கள். சில பிரத்தியேகமான கீழ் உத்தியோ கஸ்தர்களுக்கு இந்த வசதி உதவியாக இருந் தது என்பதில்சந்தேகமில்லை. ஆனால் சர்க்கார் சம்பந்தப்பட்டமட்டில் அவர்கள் செய்தது மிகவும் சரி. உத்தியோகஸ்தர்களுக்கு இப் பேர்ப்பட்ட வசதிகள் கொடுக்க இன்ஷி யூரன்ஸ் கம்பெனிகள்போல ஸ்தாபனங்கள் ஏற்படலாம். சர்க்காரிடம் பென்ஷன் தொகையைப் பெற்றுக்கொள்வதாக ஒப்புக் கொண்டு டாக்டர் சர்டிபிகேட்டின் பேரில் நபர்களுக்கு அவை மொத்தமாகப் பணம் கொடுக்கலாம். காங்கிரஸ் சர்க்கார் இந்த இனத்தைக் கண்டுபிடித்தெடுத்து செலவைக் குறைத்துக்கொண்டது அவர்கள் நிதி நிபு ணத்துவத்தையும் காட்டுகிறது.

## சேம்பர்லேன் யாத்திரை

சேம்பர்லேனின் 'ரோம்' பிரயாணத்தால் அதிகமாக ஒன்றும் உபயோகமில்லையென்று தெரிகிறது. நல்லது ஏற்படவில்லை என்ரு லும் கெடுதல் ஏற்படாதது பிரிட்டிஷ் மக்க ளுக்கு மகிழ்ச்சியைத் தரும். நரி இடமும் போகவேண்டாம், வலமும் போகவேண்டாம், மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் போதும் என்பதுபோல, 'ரோம்' யாத்திரை யால் சாதகம் இல்லாவிட்டாலும் பாதகமில்லா மல் போனது நல்ல வேளைதான். அந்தமட்டில் சேம்பர்லேன் கொஞ்சம் முஸோலினிக்கு இடங் கொடுக்காமலேயே 'தபாய்த்து'க் கொண்டு வந்துவிட்டது அவரது ராஜ தந்தி ரத்தைக்கூட காட்டுகிறது என்று சொல்லி விடலாம். தமது பெயர்போன குடையை எடுத்துக்கொண்டு உத்சாகமாக லண்டன் திரும்பிவிட்டார்.

---

(434-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பு வேளையில் உணர்ச்சிகளைக் கிளப்பும் விஷமப் பிரசாரம் செய்வது நாட்டின் நன்மைக்கல்லவேயல்ல. ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கையாள்க ளாக இருந்துகொண்டு நாட்டில் பிரிவினை உணர்ச்சியை வளர்த்துவிடுவதையே ஜீவனமாகக்கொண்டவர்கள் எதைத்தான் செய்ய முன்வரமாட்டார்கள்?

முஸ்லீம்கள் இந் நாட்டுமக்கள் என்ற முதல் உரிமையை ஒத்துக்கொள்ளாமல் முஸ்லீம்கள் நாட்டின் மற்ற உரிமைகளை எப்படி அனுபவிக்க முடியும்? அந்தமாதிரி நிலைமை அர்த்தமில்லாதது. ஸ்ரீ. ஹமீத் கான் எங்கோ பேசினபொழுது அரசிய லில் மத உணர்ச்சிகள் அதிகமாக நுழை கின்றன என்று புகார் செய்தார். முஸ் லீம்கள் இந்தியர்கள் அல்ல, ஒரு முஸ் லீம் சாம்ராஜ்யத்தின் பிரஜைகள் என்று சொல்லுவது என்ன?


நாம் முஸ்லீம்களுடைய கோரிக்கைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்துவிடலாம். ஆனால் இந்தியாவில் ஒரு பாகம் அகில முஸ்லீம் சாம்ராஜ்யத்தில் சேர்ந்தது என்ற கொள்கையையும் அப்பேர்ப்பட்ட கோரிக்கையையும் நாம் ஒரு நாளும் ஏற் றுக்கொள்ள முடியாது.

இந்தியா, யார் ஆதிக்கத்திலிருந்தாலும் பிரிவினையற்ற ஒரு தேசம். சரித்திரம் பிறந்த நாள்முதல் அது ஒன்று. இயற்கை யிலும் அது ஒன்று. அதைப் பிரிக்க யாராலும் முடியாது. அதை அங்கஹீனப் படுத்தவேண்டுமென்று எண்ணுவதுகூட துரோகம்.

ஸர் மகமத் யாகுப் எதற்காக இப்படி யெல்லாம் பேசுகிறார்? எதற்காகவானாலும் சரி, தேசத்தை விட்டுக்கொடுப்பது சரியா?

நாம் நமது முஸ்லீம் சகோதரர்களிடம் வேண்டிக்கொள்வது இதுதான். அவர்கள் முதலில் இந்தியர்கள், பிறகு முஸ்லீம்கள் என்பதை மறக்கவேண்டாம். அவர்களுக் கும் நல்லது; மற்ற வகுப்பினருக்கும் நல் லது; நாட்டிற்கும் நல்லது.

# போகிற போக்கில்



குடும்பப் பெருக்கைக் கவிகள் வாழைக் கொத்திற்கு ஒப்பிடுவதைப் பல தடவைகளில் நாம் எதிர்பாராமல் கண்டு களித்திருக்கிறோம். அப்படியே ஒரு கிராமத்தை நாம் ஒரு வாழைத் தோட்டத்திற்கு ஒப்பிடலாம். அந்தக் கிராமம் ஆற்றோரத்தில் அமைந்திருந்தால் அது அழகு வாய்ந்தபடுகைவாழைபோல்தான். சோராத மேனியும், அழியாத செல்வமும், நீடித்த வாழ்வும் படுகை வாழைக்கும், அந்த கிராமத்திற்கும், அந்த நாகரிகத்திற்கும் எப்பொழுதும் உண்டு. நமது பாரத நாட்டின் நாகரிகமே நர்மதா, சிந்து, காவேரி, கங்கை, யமுனை, கோதாவரி—இந்த ஜீவ நதிகளின் செல்லப்பிள்ளையல்லவோ?

மலையின் மனைவி காடு—காட்டுத்தீயாலும் கற்பழியாத காடு. இந்த தம்பதிகளின் அருமைக் குழந்தை ஆறு. இந்த ஆற்றின் அருமைக் குழந்தை நமது கற்பழியாத நாகரிகம்—ராமாயணமும், மகாபாரதமும் பகவத்கீதையும், சனாதன தர்மமும். இப்பொழுது நமது நிலை என்ன? அலையில் அகப்பட்ட குழந்தைபோல், கரை கண்ணுக்குத் தெரிந்தாலும் அலைச் சுருளிலிருந்து ஏறிவர முடியாமல் தவிக்கிறோமே!

உண்மையில் ஊன்றிப் பார்ப்போமேயானால் மேன்மையான மானிட வாழ்விற்கும், பசுமையான மரம், செடி, கொடி வாழ்விற்கும் ஓர் திவ்யமான ஒற்றுமை நமது கண்களுக்குப் புலப்படும். வெய்யிலிலிருந்து நிழலுக்கு வந்தவன்போல் சற்று நின்று சாந்தமாய் ஒத்துப் பார்க்க வேண்டும். சிருஷ்டியில் உள்ள கோடிக் கணக்கான வேற்றுமைகளில் ஜீவதாது போல் அமைதியாய் ஓடிவரும் ஒற்றுமையைத் தெரிந்தெடுத்து நாம் அதை அன்புடன் அனுபவிக்காதவரையில் நமக்கு ஒருபொழுதும் உண்மை வெளிப்படாது. ஒருநாளும் சாந்தமும், மோக்ஷமும் கிடையாது.

* * *

மரம் செடி வளர்ச்சிக்கு வேர்கள் எவ்வளவு அவசியமோ அப்படியே கிராம முன்னேற்றத்திற்கு கிராமப் பஞ்சாயத்து அவ்வளவு அவசியம். தோட்டத்தின் செழிப்பிற்கும் கொழுமைக்கும் நீரும், வெட்டும், கொத்தும் எவ்வளவு அவசியமோ அப்படியே கிராமங்களுக்குப் புத்துயிர் அளிக்க சரியான கல்வி முறைத் திட்டம் அவ்வளவு அவசியம். மரத்தின் காய்ப்புக்கு எரு வகையறு செய்நேற்றி எவ்வளவு அவசியமோ அப்படியே கிராம சுக வாழ்விற்கும் செல்வப் பெருக்கிற்கும், நியாயமான நில வரியும், நேர்வழியான நிலம் நீர் உரிமைகளின் சட்டதிட்டங்களும் இன்றியமையாதவை. நமது சுயராஜ்யத்திற்குக் கண்போல் பிரகாசித்துப் புத்துயிரளிக்கும் கிராமப் பஞ்சாயத்துத் திட்டத்தை எவ்விதம் திட்டம் போடவேணுமென்று இந்த வாரம் நாம் கவனிப்போம்.

* * *

நமது பாரத நாட்டில் ஏழு லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. அவற்றில் 30 கோடி ஜனங்கள் வசித்து காலம் கழித்து வருகிறார்கள். தற்காலம் கிராமநிலை எவ்விதத்திலும் சரியாயில்லையென்று நமக்குத் தெரியும். ஆனால் அதன் பொருள் என்ன? உண்டு, உறங்க வீடு இல்லாதவன் கதி எப்படியோ அப்படியேதான் இந்த 30 கோடி ஜனங்களுக்கும். மாட்டுக்காவது மழை பெய்தால் ஒரு கொட்டகை உண்டு. கிராமங்கள் பாழ் என்றால், கிருக்ஷியையே அடிப்

படையாய்க் கொண்ட நமது நாட்டில் நமது ஜீவனே பாழ்.

நமது குக்கிராமவாசிகளுக்கு கூக்குரலிட்டு சர்க்காரின் காதைத் துளைக்கும் சக்தி குறைவாயிருப்பதால் அவர்கள் இந்த நிலைமையில் இருந்துகொண்டு வருகிறார்கள். மகாத்மா காந்தி தலையிட்ட பிறகு தானே சர்க்கார் 'பைல்'களிலிருந்து கண்களைத் திருப்பிக் கிராமங்களைப் பார்க்க முயலுகிறார்கள் ?

* * *

கிராமத்தின் தற்கால நடவடிக்கைகளையும் நிலைமைகளையும் நன்கு அறியாமல் நகர வாசிகள் ஒன்றுகூடி பஞ்சாயத்து சட்டதிட்டம் போட்டால் காரியம் இன்னும் கெட்டுப்போகும். என் அபிப்பிராயத்தில் பின்வரும் திட்டம்தான் கிராமங்களுக்கு புத்துயிரளிக்குமென்று நம்புகிறேன்.

ஒட்டி நின்று, இயல்பாய்ச் சேரக்கூடிய பல சில்லறைக் கிராமங்களை ஒன்று சேர்த்து ஒரு பஞ்சாயத்தாகச் செய்ய வேண்டும். சுமார் ஐயாயிரம் ஜனங்கள் அடங்கிய பல கிராமங்களை ஒன்று சேர்த்து ஒரு பஞ்சாயத்துக் குட்படுத்தலாம். ஆயிரம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதி விதம் மூன்று வருஷத்திற்கு ஒரு தேர்தல் நடத்தி பஞ்சாயத்தை நியமிக்கலாம். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒருவரை நாட்டாண்மையாக அவர்களே தெரிந்தெடுக்கலாம். இந்தப் பஞ்சாயத்தில் 'எக்ஸ் அபிஷியோ' அங்கத்தினராக கிராம டாக்டரையும் உபாத்தியாயரையும் நியமிக்க வேண்டும். பத்து பஞ்சாயத்துகளுக்கு ஒரு சர்க்கார் நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். இவர்தான் கிராமக் கட்டைவண்டிக்கு அச்சும் கடையாணியும். எப்படி நாம் அச்சையும் கடையாணியையும் மரத்தால் செய்யாமல் இரும்பால் செய்கிறோமோ அப்படியேதான் இந்தப் பஞ்சாயத்து அச்சும் சர்க்கார் அச்சாகவே கொஞ்சகால மிருக்கவேண்டும். அன்னியராகவே இருக்க வேண்டும். நாமமிட்டுக் கும்பிட்டு சுயநலம் தேடிவரும் ஸ்தல ஸ்தாபன பக்தர்கள் இதைக் கேட்டதும் கைதூக்கி அலறிப் புடைத்துக்கொண்டு கூக்குரலிடுவார்கள். ஸ்தல ஸ்தாபன ஜன நாயக சுய ஆட்சி அழிந்து போய்விட்டதே! தனக்கு வரும் காலணா போய்விட்டதே என்று உள்ளுக்குள் கருதி சிலர் கூக்குரலிடுவார்கள். இதைக் கேட்டு புஸ்தகம் படித்து கண்ணுக்குக் கண்ணாடி போட்டு, நிமிர்ந்து பார்க்காமல் கொள்கைகளையே ஆராதனை செய்துவரும் மந்திரித் தலைவர்கள் பயப்பட வேண்டாம். நமது தேச நிலைமையையும் கிராம நிலைமையையும், நமது ஜனங்களின் சமூக சுகாதார உணர்ச்சியையும் நன்கறிந்தவர்கள் ஓர் சர்க்கார் நிர்வாக அதிகாரியின் கையில் பஞ்சாயத்துகளை ஒப்புவிக்க பயப்பட மாட்டார்கள்.

ஒவ்வொரு இலாகாவிலும் அதற்கு உட்பட்ட பஞ்சாயத்தார்கள் உதவியைக் கொண்டு மூன்றுவருஷத்திய நிர்வாகச் சீர்திருத்த திட்டம் ஒன்று போட்டு அதை இந்த கிராமப் பஞ்சாயத்து அதிகாரியிடம் நிறைவேற்றும் பொறுப்பாக ஒப்புவிக்க வேண்டும். வெட்டவேண்டிய ஆறு, குளம், கிணறு, தூர்க்கவேண்டிய குட்டைகள், சகதிகள், பள்ளங்கள், போடவேண்டிய ரஸ்தாக்கள், சீர்திருத்தம் செய்ய வேண்டிய தெருக்கள், நடவேண்டிய மரங்கள், கட்டவேண்டிய வேலிகள், தோட்டங்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள்; ரேடியோ ஸ்தாபனங்கள், அனுசரிக்கவேண்டிய சுகாதார முறைகள்-இவை எல்லாவற்றையும் ஒரு சர்க்கார் தொண்டரிடம் நாம் கட்டளையிட்டு ஒப்புவிக்க வேண்டியது. அவர் தொண்டர்; ரெவினியூ இன்ஸ்பெக்டரல்ல. போட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய—அவசியமானால் ஜனங்களைக் கட்டாயப் படுத்திக்கூட நிறைவேற்ற-அதிகாரம் இவருக்கு நாம் மனமார்ந்து அளிக்க வேண்டும். அவருக்கு ஹிட்லர், முஸோலினி அதிகாரம் கொடுத்தாலும் நான் கைகொட்டிக் களிப்பேன். காங்கிரஸ் மந்திரிசபைக்கு ஒரு டீபார்ட்டியும் கொடுப்பேன். இந்த கிராம தொண்டர் உள்ளூர்க்காரராய் இருக்கக் கூடாது. இல்லாவிட்டால் மாமன் மைத்துனனுக்கு கிராமப்பஞ்சாயத்து தினசரி விருந்தாய்ப் போய்விடும். மூன்று வருஷத்திற்கு ஒருதரம் சர்க்கார் அதிகாரிகள்போல், இந்தத் தொண்டரும் டிரான்ஸ்பருக்கு உட்பட்டவரா யிருக்க வேண்டும். வேலியைத் தாங்கும் கால்,

வேர் ஊன்றி விட்டால் பயிரின் சத்தை அடித்து விடுமல்லவா ?

கிராமப்பஞ்சாயத்தைச்சடபடவென்று ஏற்படுத்தி ஸ்தல ஸ்தாபனப் புஸ்தகக் கொள்கைகளை அனுசரித்து சட்ட திட்ட அதிகாரத்தை உள்ளூர்ப் பேர்வழி ஒருவரிடமே பஞ்சாயத்தாக நாம் ஒப்புவித்தால் நமது கிராமத்திற்கு தற்கால கிராம ஸ்திதியில் ஒருநாளும் முன்னேற்றம் கிடையாது. பிற்போக்கு தான். இரண்டு கட்சிதான், போட்டி தான்; கொலைதான்; வழக்குதான், கோர்ட்டுதான்; பொதுப் பணங்கள் துர்வினியோகம் தான். சுயநலத்திற்காகச் செலவுதான். ஜில்லா போர்டையும், முனிஸிபாலிடிகளையும், அப்பொழுது கிராமப் பஞ்சாயத்துகள் தோற்கடித்து விடும். இந்தப் படுகுழியில் நமது மந்திரி கனம் பிரகாசம் விழுந்து விடுவாரோ என்றுதான் என் கவலை. 'ஸ்தல ஸ்தாபன ஆட்சியில் அன்னியரை விடலாமோ? அதுவும் ஓர் சர்க்கார் அதிகாரியை!' என்பது ஏட்டுச் சுரைக்காயே தவிர கறிக்கு ஆகாது. ஏனென்றால் இப்பொழுது நமது கிராமங்கள் சீரழிந்து கேவல நிலையில் கிடக்கின்றன. ஸ்தல ஸ்தாபன சுயஆட்சியை நிலை நிறுத்தத் தகுந்த குணங்களும், தியாக புத்தியும், ஸ்வயநலம் பாராட்டாமல் தொண்டுசெய்யும் மனோபாவமும் சமூக சுகாதார உணர்ச்சியும் இன்னும் நமது கிராமங்களில் பூர்ணமாய் காணப்படவில்லை. நாம் இப்பொழுது பஞ்சத்தில் அடிபட்டுத் தடுமாறிக் குழம்பி நிற்கிறோம். மனதில் திடமில்லை. தெளிவில்லை. கையில் பணமில்லை. பலமில்லை. அறை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட இல்லையென்றால் சட்டதிட்ட நியாயங்களை சுயநலத்தைப் பாராட்டாமல் எப்படி நடத்திவர முடியும்? ஆகையால் சிமிட்டிக்குள் இரும்புக் கம்பியை ஊட்டி நிலை நிறுத்துவது போல் நமது கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒரு கிராம அதிகாரியை ஏற்படுத்தி வலிமை ஊட்ட வேண்டும். ஒடிந்த கை சேரும் வரையில் பலகைகளைப் போட்டுக்கட்டி வைக்கத்தானே. வேண்டியிருக்கிறது!

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு கிராமத் தொண்டர் படை சர்வீஸ் புதிதாய் நிர்மாணம் செய்து அதைக்கட்டி மேய்க்க ஒரு மந்திரி வசம் பிரத்யேகமாய் ஒப்படைக்க வேண்டும். இம்மாதிரியான சீர்திருத்த மில்லாவிட்டால் கிராமப் பஞ்சாயத்துவெறும் புரட்டாக முடியும். இவைகளை நான்20வருஷங்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். கிராமம் என்று சொன்னால் நமது தலைவர்கள் கைகொட்டிப் பரிகாசம் செய்த நாளும் எனக்குத் தெரியும்..

இப்பொழுதும் அப்படியே செய்யாமல், நான் சொல்லும் திட்டத்தைக்கொஞ்சம் கேட்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தப் பஞ்சாயத்து ஒவ்வொரு கிராமங்களிலும் செய்ய வேண்டிய விவசாய கைத்தொழில் தொண்டு விவரங்களையும் இவைகளை நிர்வாகம்செய்ய வரவு செலவுத் திட்டங்களையும் விவரமாய் அடுத்த வாரம் எடுத்தெழுதலாமென்று எண்ணுகிறேன்.

மணி.

# வார நடப்பு

ஸ்ரீ சேம்பர்லேன் சென்ற வாரம் ரோம் சென்று முஸோலினியைக் கண்டு பேசித் திரும்பினர்.

ஆனல் அமெரிக்கா மௌனமாக ஆயுத முஸ்தீப்புச் செய்ய ஆரம்பித்து விட்டது. தலைவர் ரூஸ்வெல்ட் 50 கோடி டாலர்கள் ஆயுதத் தயாரிப்புக்காக ஒதுக்கும்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறர். பிரான்ஸூம் தன் ஆகாயப் படையை அதிகரிக்கத் திட்டம் போட்டு விட்டது.

ஸ்பெயின் நிலைமை இன்னும் சிக்கலாகி வருவதைக் காண்கிறேம். ஸ்பெயின் சர்க்கார் முக்கிய இடங்களில் தோல்வியடைந்து வருகிறது. டாரகோனு என்ற மாகாணம் முழுவதையும் கலகக்காரர்கள் பிடித்து விட்டார்கள்.

கிழக்கே சைனுவில் சங்கிங் பிரதேசத்தில் ஜப்பானியர் குண்டுமாரி பொழிகிறர்கள். இதனல் ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் இரண்டு முக்கிய துரதிருஷ்ட சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. வடக்கே டன்பாட் சமீபம் ஓர் கொடிய ரயில் விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதனல் ஏழு பேர்கள் இறந்தார்கள். சமீபத்தில் பீதாவில் ஏற்பட்ட விபத்தைவிட இது பெரிதென்று கூறுகிறர்கள். அரசாங்க இன்ஸ்பெக்டர் செய்த விசாரணையில் யாரோ ரயில்வே லயனை அப்புறப்படுத்தியிருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறர். இக் கொடிய குற்றத்தைச் செய்தவர்களைக் கண்டுபிடிப்பவர்களுக்கு ரூ. 5000 கொடுப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, சென்னைக்கு வடக்கே டாடா ஆகாய விமானம் ஒன்று யர்பூடி என்ற விடத்திலுள்ள மலையுடன் மோதி அதனல் விமானி இறந்து விட்டார்.

இத் துக்க சம்பவங்களை நாம் கேட்ட பிறகு சில நல்ல விஷயங்களையும் கேட்கிறேம். சிந்து மகாணத்தில் முஸ்லிம்லீக் படு தோல்வியடைந்திருக்கிறது. பிரதம மந்திரி அல்லா பக்ஸ்மீது முஸ்லிம் லீக்காரர்கள் கொண்டு வந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம் தோற்றுப் போய்விட்டது. இதனல் லீக் பிராணன் வெளியே செல்ல எத்தனித்ததும் அதை அல்லாபக்ஸ் ரேழியில் கொண்டுவந்து போட்டு விட்டார்.

இவ்வளவு காலமாக இந்திய சுயேச்சைக்கு முட்டுக் கட்டையாக இருந்தது ஹிந்து—முஸ்லீம் பிரச்னை யல்லவா? அதை சுமுகமாகத் தீர்ப்பதற்கு வேண்டிய அறிகுறிகளைக் காண்கிறேம். பர்தோலியில் சிறுபான்மை விஷயமாக காங்கிரஸ் கார்யக் கமிட்டி மந்திராலோசனை செய்கிறது. காந்திஜி இவ்விஷயம் பற்றி ஓர் அறிக்கை தயாரித்திருக்கிறர். அதில் சிறு பான்மையோர் உரிமை, அந்தஸ்து,— இவைகளைப்பற்றி வெறும் வார்த்தைகள் மட்டுமல்லாமல் காங்கிரஸ் மாகாண அரசாங்கங்களுக்கு உத்தரவுகளும் அடங்கி யிருக்கின்றனவாம். இதை கமிட்டி பரிசீலனைசெய்து நிறைவேற்றி யிருப்பதாகத் தெரிகிறது.

நிற்க, ஆகாகானும் பர்தோலிக்கு விஜயம் செய்திருக்கிறர். அவர் காந்திஜியுடன் ஹிந்து முஸ்லீம் பிரச்னையைப்பற்றி விவாதித்து முடிவுக்கு வருவாராம்.

இப்படி ஹிந்து முஸ்லிம் பிரச்னை விவாதிக்கப்படும்போது அப்துல் குவேயம் போன்ற தேசபக்தர்கள் வகுப்புவாதத்தைக் கண்டிப்பதைப் பார்க்கிறேம். 'இஸ்லாத்திற்கு அபாயம் வந்துவிட்டது' என்ற கூச்சல் பொய்யானதென்றும்; இப்படிக் கூச்சல் போடுகிறவர்கள் பிரிட்டனின் சம்பந்திகள் என்றும் தெளிவாகக் கூறுகிறர்.

இந்திய சமஸ்தானங்களில் இன்னும் போராட்டம் நின்றபாடில்லை. எப்படி நிற்கும், சுயேச்சை ஏற்படாதபோது? ஏற்கனவே உள்ள குழப்பம் போதாதென்று ஜெய்பூர் சமஸ்தான சர்க்காரும் கைங்கர்யம் செய்ய முன்வந்திருக்கிறர்கள். சேத் ஜம்னுலால் பஜாஜ் சமஸ்தானத்திற்குள் வரக்கூடாதென்று தடை உத்திரவுபோட்டு வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டு விட்டார்கள். இதை ஒட்டி பல சிக்கல்கள் உண்டாகியிருக்கின்றன. பஜாஜ் தடை உத்தரவை மீறப் போவதாகத் தெரிவித்துவிட்டார், சமஸ்தான சர்க்கார் புத்திசாலித்தனமாகத்தடையை வாபீஸ் வாங்கிக்கொள்ளப் போகிறதா அல்லது...

வைஸ்ராய் சமஸ்தானங்களுக்கெல்லாம்யாத்திரைசெய்து 'சமஷ்டி மஹாத்மியத்தைப்' பற்றி காலக்ஷேபம்செய்து திரும்புகிறர்.

# "எங்கள் நாடு"

(வே. ரா.)

ராகம்—பூபாளம்

[இது பாரதியார் எழுதிய 'மன்னுமிமயமலை யெங்கள் மலையே' என்ற பாட்டின் 'பதில் வெட்டு.' அந்தப் பாட்டில் நாட்டின் பெருமைகள் அடுக்கப்பட்டிருக்கின்றன; இந்த 'பதில் வெட்டில்' நாட்டின் சிறுமைகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன.]

1. குப்பை கூளமெங்கள் தெருக்களில் மலையே!
கக்கூஸ் பலருக்கு வேறொன்று மிலையே!
சாக்கடைப் பெருக்கால் ஊரெல்லாமாறே
சிறுவர் தப்பளைக்களியதில் வேறே!
பெண்ணடிமை கூறும் நூலெங்கள் நூலே!
புலயா விலகென்று கத்துமெம் நூலே!
பழமையால் புளித்த நாடெங்கள் நாடே!
பிறருக்கடிமையி லெமக்கிலையீடே!

2. அல்பாயுளுகள் மலிந்த நம்நாடு!
அலுவலின்றி பலர் அலையும் நம்நாடு!
விதவைகள் அழுகை யொலிக்கும் நாடு!
விக்ருதிகள் யாவும் நாடிய நாடு!
படிப்புமட்டந் தணிந்ததெம் நாடு!
பலர்துயரால் சிலர் இன்புறும் நாடு!
பாரத நாடு பழங்கிழ நாடே!
பாரதர் நாடல்ல, பரதயர் நாடே!

3. பஞ்சம் பிணிகளென்று நிதநித மஞ்சுவோம்
பிறர் கொள்ளையிடினு மசைவின்றித் துஞ்சுவோம்!
தன்னலக்கண்ணர் பொதுத்தொண்டு புரியோம்
தாயகம் பிறரகமானதை அறியோம்!
கல்வளம் முள்வளம் நிறை திடல் நாடு
கடுங்கொசு ஜுரந்தரும் மடுநிறை நாடு!
பாதிக்குமேல் பிச்சைக்காரரெம் நாடே
பாடுவோமிஃதை யெமக்கில்லை யீடே!

---

# நாணயச் செலாவணி

(ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாஸய்யர், ரிடயர்ட் அக்கௌண்டண்ட் ஜெனரல்)

ஸர் ஜேம்ஸ் வெஸ்ட்லண்ட் நாணயச் சாலையை மூடி ரூபாயின் மதிப்பை இரட்டிப்பாகச் செய்த காலத்திலேயே, அதாவது 1893-ம் வருஷத்தில், இந்தியாவின் நாணயச் செலாவணியை 'குரங்குத்தனம்' செய்வது என்பது ஆரம்பமாயிற்று. அப்போதும் அதற்குப் பிறகு ரூபாயின் மதிப்பு 1 ஷில்லிங் 4 பென்ஸிலிருந்து 1 ஷி. 6 பெ. ஆக இயற்கைக்கு விரோதமாக மாற்றிய போதும், அடிப்படையான நோக்கம் என்னவென்றால், இந்திய சர்க்கார் வெளிநாட்டுப் பொறுப்புக்களைக் குறைந்த ரூபாய்களைக்கொண்டு சமாளித்து அதன் மூலம் வரவு செலவு திட்டத்தில் 3 அல்லது 4 கோடி ரூபாய்கள் செலவைக் குறைத்துக் கொள்ளலாம் என்பதுதான். இப்படிச் செய்யப் போய் பொது வரிகளை நூற்றுக்கு நூறு வீதம் அதிகப்படுத்தும்படி ஆகி விட்டது. இந்தக் காரியத்தால் ஜனங்கள் கையிலிருந்த வெள்ளிக்குப் பாதிப் பெறுமானம் உண்டாயிற்று - ஜனங்கள் கையிலிருந்த வெள்ளியில் பாதியை ஒருநாள் இரவு யாரோ திருடிக் கொண்டதுபோல்.

இந்தியா வியாபார நிலையில் எப்போதும் மேல் ஸ்திதியில் தான் இருந்தது. ஐச்வர்யம் எப்போது அதிகமாகுமென்றால் இறக்குமதியை விட ஏற்றுமதி அதிகமிருந்தால்தான். உள்நாட்டு வியாபாரத்தால் ஒரு நாட்டின் செல்வ நிலை குறையவோ, அதிகரிக்கவோ செய்யாது. ஒரு கோட்டின் ஒரு பையிலிருந்து மற்றொரு பைக்கு ரூபாயை மாற்றினால் கோட்டிலிருக்கும் மொத்தப் பணத்தில் மாறுதல் ஏற்படாது. ஒரே சரக்கில் வியாபாரம் செய்யும் தேசத்துடன் நம் தேசமும் போட்டி போட்டு அயல்நாட்டில் இறக்குமதி செய்தால், விலை வெள்ளியின் மதிப்பின்படியே தான் இருக்கும். இந்திய வியாபாரி, ரூபாய்க்கு எவ்வளவு மதிப்பு உண்டோ அதன் சரி பாதி அளவுக்குத்தான் ரூபாய் நாணயங்களைப் பெறுவான். உதாரணமாக 1893-க்கு முன்னால் ஒரு விவசாயி தான் ஏற்றுமதி செய்த பஞ்சுக்கோ, கோதுமைக்கோ 100 தோலா வெள்ளி பெறுகிறானென்று வைத்துக் கொள்வோம். அவன் அந்த வெள்ளியை தங்க சாலையில் கொண்டு வந்து கொடுத்தால் 99 ரூ. கிடைக்கும். சர்க்காருக்கு ரூ. 50 வரி செலுத்திவிட்டு 49 ரூ. மீர்க்கலாம். தற்போது பொருளாதார நெருக்கடியே இல்லாவிட்டால் கூட, 100 தோலா வெள்ளி அவனுக்குக் கிடைக்கிறதாயிருந்தால்கூட, அந்த வெள்ளிக்குப் பதிலாக அவனுக்கு ரூ. 50 தான் கிடைக்கும். இதை அவன் சர்க்காருக்கு வரியாகச் செலுத்தி விடுவான். அவனுக்கு ஒன்றும் கிடையாது. இதுமட்டுமல்ல. விவசாயிக்கு இப்போது 100 தோலாவுக்குக் குறைவாகவே கிடைக்கிறது. ஆனால் வரி விகிதமோ அதிகமாகி வரி 50 ரூபாய்க்கு அதிகமாகவே ஆகி விட்டது. இதனால் ஜனங்கள் (1) அதிக வரி செலுத்த வேண்டியது. (2) தாங்கள் ஏற்றுமதி செய்த சாமான்களுக்குக் குறைந்த வரும்படியைப் பெற வேண்டியிருக்கிறது. (3) அரசாங்க உத்தியோகஸ்தர்கள் 'ரூபாய் சம்பளங்களைப்' பெறுவதால் தேசம் அதிகச் செலவுக்கு உள்ளாகியிருக்கிறது. இந்தமூன்று நஷ்டங்களும் சர்க்கார் தங்கள் வெளிநாட்டுச் செலவுகளைக் குறைத்துக் கொள்ள நாணயச் செலாவணியை மாற்றியதால் உண்டாகியிருக்கின்றன. இப்படி ரூபாய்க்கு அதிகமான மதிப்பு வந்து விட்டதால், உயர்ந்த சர்க்கார் சம்பளங்களைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. ஜனங்களில் சராசரி வருமானத்துக்கு சம்பந்தமில்லாமல் உலகத்திலேயே அதிகச் சம்பளம் வாங்கும் உத்தியோகங்கள் இந்த தேசத்தில் இருந்து வருகின்றன. பஞ்ச காலத்தில் தொழிலுக்கு தினசரிக் கூலி 1 அணா அல்லது $1\frac{1}{2}$ அணா.

ஆனால் நிர்வாக சபை மெம்பர் வருமானம் அதைவிட 3000 பங்கு.

இங்கிலாந்தின் பவுனை எடுத்துக்கொண்டால், அது தங்கத் திட்டத்தை மாற்றி விட்டால் கூட, ஒரு தங்க நாணயத்தில் எவ்வளவு தங்கம் இருக்கிறதோ அது தான் பவுனின் மதிப்பு. ஒரு தேசத்தின் வியாபார நிலை சாதகமாக இருக்கும் போது, நாணயமாற்று விகிதத்தைக் குறைத்தால் க்ஷேமமே யென்பதும் அதிகப் படுத்தினால் எல்லாம் நஷ்டம்தான் என்பதும் நிச்சயம். இந்திய ரூபாயின் நாணயச் செலாவணி விகிதத்தை குறைப்பதென்று சொல்வது கூடத் தவறு. குறைக்கவோ அதிகரிக்கவோ வேண்டியதில்லை. சரியானபடி நிர்ணயித்தால் போதுமானது.

நமது நிபுணர்கள் 1 ஷி. 6 பெ. விகிதம் நல்லதா அல்லது 1 ஷி. 4 பெ. விகிதம் நல்லதா என்று சர்ச்சை செய்வது ஆச்சரியமாயிருக்கிறது. அதுவும் 43 வருஷங்களுக்கு முன்னால் தங்கசாலை மூடப்பட்டு ஜனங்கள் அதிகம் வரி செலுத்தி ரொம்ப நஷ்டம் அடைந்திருக்கும் இந்த சமயத்தில். இது ரூபாயை விட்டுவிட்டு பைசாவைக் கணக்குப் பார்ப்பது போல. நிலவரியை நமது பிரமுகர்கள் தற்போது கூடுதலாயிருக்கும் 18% லிருந்து $12\frac{1}{2}\%$ ஆகக் குறைக்கும்படி மன்றாடுகிறார்கள். ஆனால் இவ்வளவு நாளாக 100% அதிகமாக, ரூபாயின் மதிப்பை 'தில்லு மில்லு' செய்வதால், வசூல் செய்து வருவதை அவர்கள் அறியவில்லை. பாவம்! லண்டன் நிபுணர்கள் உதவியால் இந்திய சர்க்கார் ரிவர்ஸ் கௌன்ஸில் பில்லில் 200 கோடி நஷ்டம் விளைவித்திருக்கிறார்கள். இந்தியாவுக்காக ஏற்படுத்திய தங்க ரிஸர்வையும் நீக்கி விட்டார்கள். இதற்காக ஒருவரையும் குற்றம் சொல்ல முடியாது. இதற்கெல்லாம் காரணமான ஐ. ஸி. எஸ். செல்லப் பிள்ளையான லார்ட் ஹெய்லி உயர்ந்த ஸ்தானத்துக்குக் கொண்டுவரப் பட்டார். ஓர் பூகம்பம், ஓர் வெள்ளம்போல் இது இந்தியாவிக்குத் துரதிருஷ்டம்.

இன்னும் இவ்வளவு வருஷ காலமாக, பொது ஜனங்களைக் கலந்துகொள்ளாமல், விவாதிக்காமல், இந்திய சர்க்கார் 1 ஷி. 9 பெ. விகிதமும் 1 ஷி. 6 பெ. விகிதமும் பென்ஷன், லீவ் அலவன்ஸுகள் அனுப்பி யிருக்கிறார்கள். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன? சர்க்கார் செய்யும் இந்தக் காரியங்களெல்லாம் பிரிட்டிஷ் சர்க்கார் கட்டளையின் பேரிலோ அல்லது பிரிட்டனையும் பிரிட்டிஷாரையும் உத்தேசித்தோ செய்யப்படுகின்றன என்பது தெரிகிறது. இந்தக் குட்டுகளை காலஞ்சென்ற கோகலே உடைத்து விட்டார். ஆனால் இவையெல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்று.

அரசாங்கத்தில் உயர்ந்த பதவியில் உள்ளவர்கள், நிறையச் சம்பளம் வாங்குபவர்கள், நாணயச் செலாவணியைக் குரங்குத்தனம் செய்பவர்கள், கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்துகொண்டு தற்போதுள்ள விகிதத்தைக் குறைக்க மாட்டேன் என்று சொல்வது சகஜந்தான். தற்போதுள்ள விகிதத்தைக் குறைத்து வெள்ளி மதிப்புக்கு ரூபாயைக் கொண்டுவந்தால் அவர்கள் சம்பளங்களின் மதிப்பு குறைந்து போகும். ஆகையால் உத்தியோகஸ்தர்கள் இந்த மாறுதலை விரும்ப மாட்டார்கள்.

இதனால் ஜனங்களுக்கு இழைக்கப்படும் அநீதியை கராச்சி ஸர். எம். டி வெப் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அரசாங்கம் பிடிவாதத்துடன் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த நாசமாய்ப்போன முறைக்கு விரோதமாகச் சொல்லப்படும் எதையும் கேட்பது அவர்களுக்கு அவசியமில்லை தான். ஆகையால்தான் இந்தச் செலாவணி முறையின் உண்மைக் கருத்தையும் அதன் பலனையும் ஜனங்கள் உணர்வது அவசியமாகிறது.

மற்ற தேசங்கள் தங்கள் தங்கத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுகின்றன. ஆனால் சென்ற வருஷங்களாக 300 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கம் தேசத்தை விட்டுப் போவதை சர்க்கார் ஆனந்தத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

# மின்னலும் இடியும்

[ஆர். கே. விஸ்வநாதன் பீ. ஏ. (ஆனர்ஸ்), அண்ணுமலை சர்வகலாசாலை]

மின்சாரத்தில் மிகை மின்சாரம், குறை மின்சாரம் என்று இரண்டு வகையுண்டு. அதைப் பொருள்களில் ஏற்றிவைக்கலாம். அப்பொருள்களை மின்சுமை யேற்றப்பட்ட பொருள்கள் என்று கூறுவது வழக்கம். இங்கே மின்சாரம் ஓடாமல் ஓரிடத்தில் தேங்கி இருப்பதால் அதை நிலை மின்சாரம் என்று கூறுவார்கள். பொருள்களில் இரண்டுவிதமாக மின்சுமை ஏற்றலாம். ஒன்று தீட்டத்தால் சுமையேற்றுவது (Electrification by Conduction). மற்றொன்று தூட்டத்தால் சுமையேற்றுவது (Electrification by Induction). இந்த இரண்டு முறைகளினுலும் மிகை மின்சாரத்தையோ, குறை மின்சாரத்தையோ ஏற்றலாம். ஒரே வகையைச் சேர்ந்த மின்சாரச் சுமைகள் ஒன்றையொன்று தள்ளுகின்றன என்றும், வெவ்வேறு வகையைச்சேர்ந்த மின்சாரச்சுமைகள் ஒன்றையொன்று கவருகின்றன என்றும் அறியப்பட்டது.

பதார்த்தங்களெல்லாம் சின்னஞ் சிறு அணுக்களாலானவை என்று அணு இயக்கவாதத்தால் நாம் அறிகிறோம். திட திரவ வாயு நிலைகளின் வேற்றுமைக்கு இந்த அணுக்களின் நெருக்க வேற்றுமையே காரணமாகும். சமீபகாலம் வரையில் அணுக்களே மிகச் சிறியவை என்று கொள்ளப்பட்டது. இந் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஜே. ஜே. தாம்ஸன் என்ற விஞ்ஞானப் பேரறிஞர் அணுக்களைவிடச் சிறிய துகள்களாகிய மின்னுருக்களை (Electrons) கண்டு பிடித்தார். அவை குறைச்சுமையைக் கொண்டிருப்பதை அறிந்தார். ஒவ்வொரு அணுவிலும் இத்தகைய மின்னுருக்கள் சிலவும் பலவும் இருக்கின்றனவென்றும் கண்டறியப்பட்டது. அணு பொதுவாய் அலித்தன்மை வாய்ந்திருப்பதால் அதில் மின்னுருக்களைத் தவிர, மிகைச்சுமை யேற்றுள்ள துகள்கள் சிலவும் அங்கம் வகிக்கவேண்டுமென்று தெரிந்தது. தற்காலம் அணுவின் அமைப்பைப்பற்றி ஊகித்தறிந்தது என்னவெனில், ஒவ்வொரு அணுவிலும் மிகை மின்சுமையை ஏற்றுள்ளதொரு கரு (Nucleus) உண்டு. மேலும் சூரியனைச்சுற்றி வரும் கிரகங்களைப்போல, பல மண்டலங்களில் கருவைச் சூழ்ந்து ஓடி வரும் குறை மின்சுமை கொண்ட மின்னுருக்களும் இருக்கின்றன. ஒவ்வொரு அணுவிலும் கருவைச் சுற்றி எத்தனை மின்னுருக்கள் ஓடுகின்றனவோ அத்தனை அளவு கொண்ட மிகை மின்சுமை கருவின்மீது இருக்கும். எனவே, ஒரு பூரணமான அணு, மின்னியல் அலித்தன்மை கொண்டிருக்கும்.

பவனத்திலுள்ள (Atmosphere) துகளனைத்தும் மின்இயல்பு வாய்ந்திருப்பதை வெகு நாட்களுக்கு முன் கண்டறிந்தார்கள். 1749-ம் ஆண்டில் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மேகங்கள் மின்சுமை ஏற்றிருப்பதை "பிராங்க்ளின்" என்ற விஞ்ஞானி ஒரு பரீக்ஷையினுல் நிரூபித்துக் காண்பித்தார். அவ்வாறு இருப்பதற்குக் காரணம் சமீப காலத்தில்தான் அறியப்பட்டது. விண்ணியல் கதிர்கள் (Cosmic Rays) என்ற மிக உயர்ந்த ஆற்றல் வாய்ந்த சில கதிர்கள் பவனத்திலே உயரமான இடங்களில் மிகுந்து தென்படுவதை விஞ்ஞானிகள் கண்டறிந்தார்கள். இவை அதிகமான ஊடுருவும் சக்தி கொண்டிருப்பதையும் அறிந்தார்கள். பவனத்தின் அணுக்கள் அயனப்பட்டிருப்பதன் (Ionise) காரணம் முக்கியமாக இக்கதிர்களினுல்தான் என்று உணரப்பட்டது. அதாவது இக்கதிர்கள் பவனத்தின் அணுக்களுள் ஊடுருவி, மின்னுருக்களைச் சிதறவடிப்பதால் அணுக்கள் அனைத்தும் மிகை மின் சுமையைக் கொண்டதுகளாகவும், குறைச்சுமையை யேற்ற மின்னுருக்களாகவும் பிரிக்கப்படுகின்றன என்பதுதான் கருத்து. இம்மாதிரி பவனம் அயனப்பட்டிருப்பதற்கு, பூமிக்குள் அழுந்திக் கிடக்கும் கதிரியக்கப் பொருள்களிலிருந்து (Radio-active substances) ஓய்வு இல்லாமல் எப்பொழுதும் வெளி

வந்துகொண்டிருக்கும் காமா - கிரணங்களென்ன (r-rays), சூரியனிடமிருந்து வரும் புற ஊதா கிரணங்களென்ன (Ultra-violet Rays), இவைகளும் காரணமாகும் என்று அறியப்பட்டது.

ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மேகங்களிலிருந்து மழை பெய்யும்பொழுது விழும் நீர்த்துளிகள், சுமையேற்றிருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தார்கள். இது சம்பந்தமாக மெச்சத்தக்க ஆராய்ச்சிகள் நடத்தினவர் டாக்டர் ஸிம்ஸன் என்ற பேரறிஞர். இவர் நம் நாட்டில் ஸிம்லாவில் உள்ள பவன சோதனை நிலையததில் (Meteorological Station) தான் ஆராய்ச்சிகளை நடத்தினர். மழைத் துளிகளின் மின் சுமையையும் அதன் வகையையும் அளப்பதற்கு ஒரு கருவியைப் புதிதாகக் கண்டு பிடித்தார். இவ்வாறு நீர்த்துளிகள் மின்சுமை ஏற்றிருப்பதற்கு முக்கிய காரணம் C. T. R. வில்ஸன் என்பவரால் கொடுக்கப்பட்டது. தண்ணீரின் பரவை இசிவை (Surface Tension)க் கொண்டு சிறு துளிகள் நிலைத்திருக்க முடியாது என்று காண்பிக்கப்பட்டது. அப்படியானல் மழை எவ்வாறு ஏற்படுகிறதென்ற ஐயம் உண்டாயிற்று. மேற் சொன்ன விஞ்ஞானிதான் பவனத்திலுள்ள மிகை மின்சுமை கொண்டதுகளின் மேலும், மின்னுருக்களின் மேலும் நீர் முதன் முதலில் படிவதால் துளிகள் உண்டாகி மழை பெய்வது சாத்தியமாயிற்று என்று கண்டறிந்துக் காட்டினர். ஆகையினல் மழைத் துளிகள் மின்சுமை கொண்டிருப்பது விளங்கும்.

பவனத்திலேற்படும் சில மாறுபாடுகளினலே, அதிலும் முக்கியமாக சூடு மாறுபாட்டினலே காற்று நிரைகள் பவனத்திலே மேலெழுவதால் மேகங்களிலே பெரிய நிலையியல் மின்சாரத் தேக்கங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஒரு பெரிய மேகம் மிகை மின்சாரத்தால் நிரம்பி இருப்பதாகக்கொள்ளுவோம். இதன் தூட்டத்தால் அடுத்துள்ள மேகங்களிலும், பூமியின் பகுதிகளிலும் குறை மின்சாரத் தேக்கங்கள் ஏற்படுகின்றன. எதிரான சுமையேறியுள்ள மேகங்கள் நெருங்கி வரும்போது அவற்றினிடையே மின்சாரப் பாய்ச்சலினல் வெளிப்படும் ஒளியாற்றலும், ஒலியாற்றலுமே மின்னலும், இடியுமாகத் தோன்றுகின்றன. இதுவே சாமானியமாய் நிகழ்வது. ஆனல் சில சமயங்களிலே ஒரு மேகத்திற்கும் அதற்கு எதிராகச் சுமையேறி நிற்கும் பூமியின் பகுதிக்கும் இடையில் மின் சாரப் பாய்ச்சல் உண்டாகிறது. இதையே நாம் இடி விழுதல் என்று சொல்லுகிறோம். மேலும் ஒரே மேகத்தின் மேற்புறத்திற்கும், அடிப்புறத்திற்கும் இடையே மின் பாய்ச்சல் நிகழ்வதனல் மின்னல் உண்டாகலாம். மின்னல் நிகழும்போது உயர்ந்த மரங்கள், கட்டிடங்கள் முதலியவற்றின் அருகிலே நிற்கக் கூடாது. தண்ணீர் தேங்கி நிற்கும் குளம், குட்டைகளுக்கு அருகிலும் இருக்கக் கூடாது. ஏனெனில் நீச நிலைத் தகைவு மார்க்கத்தை (path of least resistance) மேற்கொண்டு மின்சாரப் பாய்ச்சல் இவற்றின் மூலமாக பூமியை அடைய நேரிடும்.

மின்சாரம் கூரிய முனைகளிலே சென்று தேங்கும் இயல்புடையது. இவ்வாறு ஓரிடத்திலே சேர்ந்த மின்சாரத்தின் நிலைப்பு (Potential) உயர்ந்து விடுவதால் அதனருகே வரும் காற்றுத் துகள்கள் எளிதிலே மின்சார மேற்றுத் தூரத்தப் படுகின்றன. பின்னும் வேறு துகள்கள் வந்து அங்கே கூட அவையும் மின்சுமையேற்று ஓடுகின்றன. இவ்வாருக அந்த முனையிலே தேங்கிநின்ற மின்சார மெல்லாம் ஒழுகி விடுகிறது. இதே தத்துவத்தைக் கொண்டுதான் உயர்ந்த கட்டிடங்களில் 'இடிதாங்கி'கள் வைக்கப்படுகின்றன. இடிதாங்கி என்பது நீண்ட உலோகச் சட்டமாகும். இதன் முனையிலே பல சிறு ஊசிபோன்ற முள்கள் மேனேக்கி நீட்டிக் கொண்டிருக்கும். இச்சட்டம் கட்டிடங்களின் உச்சியிலே செங்குத்தாக நிறுத்தப்பட்டிருக்கும்.இவற்ருேடுபிணைக்கப்பட்ட செப்புக் கம்பியின் மற்ருெரு முனை பூமியினடியில் ஈரமுள்ள இடத்திலே புதைக்கப்பட்டிருக்கும். மின்சுமையேறிய மேகங்கள் ஆகாயத்தில் தவழ்ந்து செல்லும் போது, தூட்டத்தால் ஏற்படுகிற அதற்கு எதிரான மின்சாரம், பூமியிலிருந்து கம்பி வழியாக மேலேறி, இடிதாங்கியின் நுனியிலுள்ள முள் முனைகளின் வழியாக

ஆகாயத்திலே ஒழுகிச்சென்று, மேகத்தையடைந்து, அதன் சுமையைத் துலைப்படுத்தும். இதையும் மிஞ்சி மின்பாய்ச்சல் ஏற்பட்டால் அப்பாய்ச்சல் இடிதாங்கியிலே புகுந்து கம்பி வழியாகக் கட்டிடத்திற்கும், மற்றும் அருகிலுள்ள பொருள்களுக்கும் யாதொரு தீங்கும் உண்டாக்காமல் பூமியைச் சென்றடையும்.

மின்பாய்ச்சல் ஏற்படும்போது உண்டாகும் சப்தத்தைக் கேட்டே, இடி இடிக்கிறது என்று சொல்லுகிறோம். மின்னலும், இடியும் ஒரே நொடியிலே ஏற்பட்ட போதிலும், ஒலி ஒளியைவிட மிகக்குறைவான வேகத்தோடு செல்வதால், மின்னல் கண்ணுக்குத் தென்பட்ட பிறகு சிறிது நேரம் கழித்தே இடியின் ஒலி காதிற்குப் புலப்படுகிறது. மின் பாய்ச்சல் ஏற்படும் போது வெளிப்படும் வெப்ப ஆற்றல் அருகிலிருக்கும் காற்றில் நெருக்க விலக்கங்களை (Condensation and Rarefaction) உற்பத்தி செய்து ஒலி அலைகளை உண்டு பண்ணுவதால் நாம் சப்தத்தைக் கேட்கிறோம். சில சமயம் அடுத்தடுத்து மின்பாய்ச்சல் ஏற்படுவதனாலும், எதிரொலியினாலும் நெடுநேரம் வரை உறுமல்கள் கேட்டுக் கொண்டிருக்கும். ஒளியின் வேகம் ஒரு சகிண்டிற்கு 1,86,000 மைல் ஆகும். ஆகையினால் நாம் மின்னலின் ஒளியை உடனே பார்த்து விடுகிறோம் என்று கொள்ளலாம். ஒலியின் வேகம் சாதாரண பவனச் சூட்டில் ஒரு சகிண்டிற்கு 1120 அடி ஆகும். எனவே மின்னல் தென்பட்ட பிறகு இடியைக் கேட்பதற்குண்டான நேரத்தை அறிந்து, அதை 1120 ஆல் பெருக்க மின்னல் எவ்வளவு தூரத்தில் எற்பட்டது என்பதை அறியலாம்.

---

# விஜயலக்ஷ்மி ஜெனரல் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

1937-ம் வருஷம் டிஸம்பர் 31-தேதி முடிய இக்கம்பெனியார் நமக்கனுப்பியிருக்கும் வருஷாந்திர அறிக்கை குறிப்பிடத்தக்கது. நடைமுதல் வருஷத்தில் ரூ. 4,51,250 பெறுமானமுள்ள 340 பாலிஸிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவைகளின் வருஷ பிரிமியம் தொகை ரூ. 22,664-3-0. வருஷக் கடைசியில் கம்பெனியின் 'பிஸினெஸ்' ரூ. 15,61,864-9-0.

நடைமுதல் வருஷத்தில் 'பிஸினெஸ்' குறைவாயிருந்த போதிலும் கம்பெனியின் செல்வ நிலையை வெகுதூரம் உயர்த்துவதற்கு டைரக்டர்கள் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆயுட் நிதியிலும் கவர்ன்மெண்டு ஸெக்யூரிடியிலும் கம்பெனி மிகவும் பலமடைந்திருக்கிறது.

ஆயுட் நிதியில் ரூ. 1,40,564-12-1 இருக்கிறது. முன் வருஷத்தைக் காட்டிலும் 50,253-13-4 கூட. இன்னும், கவர்ன்மெண்டு செக்யூரட்டிகளில் வருஷக் கடைசியில் ரூ. 1,47,718 இருக்கிறது. சென்ற வருஷத்தை விட சுமார் 50,000 அதிகம்.

ஆகையால் கம்பெனி முன்னை விட பலமடைந்திருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. கம்பெனி திடமான செல்வ நிலையுடனும், சிக்கனமான நிர்வாகத்தோடும் வேலை செய்து வருவதால் பாலிஸிதாரர்களுக்கு மிகுந்த பத்திரத்தை அளிக்கிறது. கம்பெனியின் 'பிஸினெஸ்' விரைவில் அதிகமாகு மென்பதை டைரக்டர்கள் நிச்சயம் எதிர் பார்க்கலாம்.

# "ராணுவபலம் நமக்கேது?"

(ஸ்ரீ. என். ஆர். சுப்ரமண்யம் பி. ஏ., பி. எல்.)

"எனக்கு இரண்டு இட்லி, ஒரு ப்ளேட் ஸாம்பார்." என்று என் நண்பர் பையனிடம் சொல்லிவிட்டு, என்னை நோக்கி "உங்களுக்கு என்ன?" என்றார்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம் ... ... இன்றைக்கு பத்திரிகையில் என்ன விசேஷம்?" என்றேன்.

காபி கிளப்பில் இவ்விஷயங்கள் நடந்தன வென்று, நான் சொல்லாமலே விளங்கும். காபி கிளப்பு ஒன்றில் தான் உத்ஸாகத்துடன் ஊர் வம்பு அளக்கலாம். உலக விஷயங்களை உதறிப் பேசலாம்; சஹிக்கமுடியாத சங்கீதங்களை, (முடியுமானால்) சந்தோஷத்துடன் கேட்கலாம். இவ்வளவு ஸ்வதந்திரம் இருக்குமிடத்தில் நான் என் நண்பரை "பத்திரிகையில் இன்றைக்கு என்ன விசேஷம்?' 'என்று கேட்டேன்.

நான் பத்திரிகையே படிப்பதில்லை அதைத் தொட்டால் ரணகளத்தின் ஞாபகம் வந்து விடுகிறது. பத்திரிகாசிரியர்கள் ஒன்றும் அகப்படாவிடில், ஒரு தற்கொலையையாவது விஸ்தரித்து எழுதுகிறார்கள். ஆனால் இப்பொழுது செய்திகள் அகப்படவில்லையே என்ற கவலை கிடையாது. கோரமான செய்திகள் ஜலப்பிரளயமாக தபால் மூலமாகவும், தந்தி மூலமாகவும், தந்தியில்லாத காற்று மூலமாகவும், வந்து மோதுகின்றன. எதைப் பிரசுரிப்பது, எதை விட்டுவிடுவது, என்ற கவலைதான் பத்திரிகாசிரியர்களுக்கு மேலிட்ட எண்ணமாயிருக்கிறது. கிழக்கே சீனாவின் படுகொலையைப்பற்றி எழுதுவதா? அல்லது ஸ்பெயின் வீரச்செயல்களை நினைத்து, அதில் கணக்கிடாமல் மடியும் குழந்தைகளை விஸ்தரிப்பதா? முஸ்ஸோலினியின் முறுக்கை நினைப்பதா? சேம்பர்லின் ஆகாயத்தில் பறப்பதை நினைத்து ஆச்சர்யப்படுவதா? இல்லாவிடில் பூகம்பத்தையும், ராணுவப்படை பல தேசங்களில் அதிகரிப்பதைப்பற்றியும் எழுதுவதா? என்று பல யோஜனைகள் தோன்றி, ஒன்றும் புரியாமல் மனக்கொதிப்புடன் உட்கார்ந்து கவலையுற்று இருக்கின்றனர். தலைக்குமேல் இருக்கும் மின்சார விசிறியும், மேஜை மேலிருக்கும் ஐஸ் தண்ணீரும் தான் இந்தக் கொதிப்பை அடக்குகின்றன என்று எனது அபிப்பிராயம். இவ்விரண்டுமில்லாவிடில், பத்திரிகை பிரசுரிப்பவர் நிலை மிகவும் பரிதாபப்படக்கூடியது.

படிப்பவர்களும் ஆவலுடன் இச்செய்திகளையே முதலில் பார்க்கின்றனர். காலையில் பத்திரிகையைப் பிரித்தவுடன், நடுப்பக்கத்தில் எவ்வளவு சூடான விஷயங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன என்று ஆவலுடன் என் நண்பர் பார்ப்பதை நான் கவனித்திருக்கிறேன். இவைகள் போன்ற செய்திகள் இல்லாவிடில், அலுப்புடன் பத்திரிகையை கீழே எறிந்துவிடுகின்றனர்.

"என்ன விஷயம்?" என்று என் நண்பரை காப்பி கிளப்பில் கேட்டதும், அவர் மனச்சலிப்புடன் "ஒண்ணுமில்லே" என்று அழுத்திச் சொன்னார்.

"சீனாவில் யுத்தம் எப்படி?" என்றேன்.

"அது இரண்டு வருஷமாகத்தான் நடக்கிறது. ஸ்வாரஸ்யமில்லை" என்றார்.

"ஸ்பெயின் எப்படி?"

"அதுவும் அப்படித்தான்.", என்று அலக்ஷியமாகச் சொன்னார்.

"ஜர்மனியில்?"

"ஜர்மனி புதிதாகத் தேசப்படம் எழுதுகிறதாம். தான் கோடிட்ட இடமெல்லாம் "ஜர்மனி தேசம்" என்று கர்ஜிக்கிறதாம். அதைக்கண்டு பழைய சிங்கங்களெல்லாம் ஓட்டம் பிடிக்கிறதாம்."

"இவ்வளவுதானா? நம் தேசத்தில் ஏதாவது உண்டா?" என்றேன்.

"கொசு உபத்திரம் எங்கும் ஜாஸ்தியாயிருக்கிறதாம். மாஜி மந்திரிகள் ஹிந்தி

ஜனங்களுக்குத் தெரிந்துவிட்டால் ஒற்றுமை ஏற்படுமே என்று அலறுகின்றனராம்.''

“உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டேன்.

“எதில் என் அபிப்பிராயம் வேண்டும்?'' என்றார்.

“நம் தேசத்தின் நிலையைப்பற்றி''

“நடு நிலை. இப்பொழுது கவலைக்கு ஒன்றும் இடமில்லை'' என்றார்.

“யாராவது போருக்கு நம்முடன் வந்தால் என்ன செய்வது'' என்று கவலையுடன் கேட்டேன்.

“அதான் வடக்கே ஹிமயமலை இருக்கிறதே? எப்படி வரமுடியும்?'' என்று என்னை கேட்டார்.

“ஆகாய மார்க்கமாக வந்தால்? அல்லது சமுத்திரத்தின் வழியாக வந்தால்?'' என்று கேட்டேன்.

“நமக்கொன்றும் பயமில்லை. அதெல்லாம் அப்படி ஏற்படாது'' என்று கண்ணை இறுக மூடிக்கொண்டே சொன்னார்.

“ஏற்பட்டால்''

“ஏதாவது அசட்டுத்தனமாக என்னைக் கேட்காதேயும், வந்தால் பார்த்துக் கொள்ளலாம்'' என்றார்.

“ராணுவ பலம் நமக்கேது? வந்தால் என்ன செய்வது?'' என்றேன்.

“ராணுவ பலம் நமக்கு எதற்கு? நமது எல்லையில் கொஞ்சம் ஜலத்தைத் தெளித்துவிட்டு, துளசி தளத்தை அப்படிக் கிள்ளிவைத்தால், யார் அதைத் தாண்டி வரமுடியும்?'' என்று கையால் துளசிதளத்தை எப்படிக் கிள்ளுவது என்று காண்பித்தார்.

இதற்கு மேல், என்ன கேட்பது என்று எனக்குத் தெரியவில்லை. சற்று அவரை விட்டு, கிளப்பில் பாட்டுக் கிளம்பிய விடம் நோக்கினேன். கிராமபோன் “நம்பிக்கை கொண்டெல்லோரும் ... ... கைராட்டை சுற்றுவோம், கைராட்டை சுற்றுவோம் ... ... ராணுவபலம் நமக்கேது ... ... கைராட்டை சுற்றுவோம்'' என்ற பாட்டை பல ஸ்வர சாஹித்யங்களுடனும் பாடியது.

“அதையாவது சுற்றினால் தேவலையே. கைராட்டை சுற்றினால் ராணுவமில்லாவிடினும் கை பலமாவது ஏற்படுமே?'' என்று மனம் நொந்து என் ஸ்நேகிதரைக் கேட்டேன்.

“அதான் லக்ஷக்கணக்காக சுற்றுகிறதே ... .... .... சக்ராயுதம்போல்'' என்றார், என் நண்பர்.

“எது?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

“கிராமபோன் பிளேட்!'' என்று பதில் சொல்லிவிட்டு அடக்க முடியாத சிரிப்புடன் இட்லியையும், ஸாம்பாரையும் தாக்கினார்.

எனக்கு அப்பொழுது வந்த எரிச்சல்!

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# சின்னம்மாள்

(ஸ்ரீ. ஆ. வெ. ஜெயராமன்)

"சீதா, சீதா, ஏ சீதா, என்னடி செய்யறே, வெங்கலப் பானையில் அரிசியைக் கொட்டிட்டு? எங்கேடி போனே? வெங்கலப் பானை பொங்கி அடுப்பை அணைச்சுப் புடுத்து, இன்னும் என்னடி செஞ்சிண்டிருக்கே?"

"ஏன் அம்மா, இதோ வந்துட்டேன்" என்று மெல்லிய தொனியில் கூவிக்கொண்டே சீதா உள்ளே வந்தாள்.

"ஏண்டி, அடுப்பிலே வெங்கலப்பானையை வச்சுட்டு எங்கே போனே? நன்னயிருக்கு காரியஞ் செய்யறது. நாளைக்குப் புக்காம் போயி வாழுர பொண்ணுத்தான் இருக்கே. ஏதாவது கொஞ்சம் கவலை இருந்தாத்தானே உனக்கு? நல்ல பொண்ணுடி நீ!" என்று கர்ஜித்துக்கொண்டே பழையதுப் பானையைத் தொட்டி முற்றத்தில் 'டமார்'னு வைத்தாள் காமாட்சி அம்மாள்.

"இல்லே அம்மா, யாரோ வாசலில் அப்பாவோடே பேசிண்டிருந்தா, யாருன்னு பார்த்தேன்" என்று சொல்லிக்கொண்டே அடுப்பை ஊதினுள் சீதா.

"உம், உன்னைக் கலியாணம் பண்ணிக்கிறதுக்கு எத்தனை பேர் வந்திருக்கான்னு பாத்தயா?" என்று இடித்துக் கூறினுள்.

சீதாவின் முகம் சிவந்துவிட்டது. அவளுடைய தாமரை போன்ற கண்களிலிருந்து, இரண்டு சொட்டு கண்ணீர்த் துளிகள் சிதறிக்கிடந்த ஓர் தணலின்மேல் விழுந்து 'சொர்ர்' என்று சப்தமிட்டன.

"அடியேய், உன்னைத்தானே, இங்கே வா" என்று கத்திக்கொண்டே கூடத்திற்கு வந்தார் சுப்பிணி அய்யர்.

"அடியாவது, நுனியாவது, என்ன அடி வேண்டிருக்கு. வாசல்லே புருஷாள்ளாம் ஒக்காந்திருக்கிறது மறந்து போயிடுத்தா? அசட்டைக் கட்டிண்டு மாரடிக்க வேண்டிருக்கு" என்று அடுக்கிக்கொண்டே பரதேவதை கூடத்துக்கு வந்தாள்.

"இரைச்சல் போடாதே, வாசல்லே எல்லோரும் இருக்கா, ராட்சஸி ஒருத்தியைக் கட்டிண்டு திண்டாட வேண்டிருக்கு. நான் 'கூறுமல் சந்நியாசங்கொள்ள' வேண்டியதுதான்."

"நான் ராட்சஸியா இருந்தா இருந்துட்டுப் போரேன். சாதுவா யாரையாவது கலியாணம் பண்ணிண்டு சந்நியாசம் வாங்கிக்காமே இருங்கோ. சண்டை போடறதுக்குத்தானு என்னைக் கூப்பிட்டேள்?" என்று சொல்லிக்கொண்டே உள்ளே செல்ல ஆரம்பித்தாள்.

"கர்மம், கர்மம்! ஒரு விஷயம் பேசணும்னு சேணம் வச்ச குதிரை மாதிரி கிளம்பிட்டாளே!"

உள்ளே சென்ற காமாட்சி அம்மாள் திரும்பவும் கூடத்துக்கு வந்தாள்.

"இந்தாருங்கோ, இப்போ சண்டை போடறதுக்கு நான் தயாராகவுமில்லே, எனக்கு நேரமுமில்லே. மூட்டைத்துணி கிடக்கு தோக்கிறதுக்கு. விஷயம்னு விஷயத்தைச் சொல்றதுதானே."

"சொல்றதுக் குள்ளேயே பறக்கிறயே. சீதாக்கு ஒரு ஜாதகம் வந்திருக்கு. பையன் ஜாதகமும் பெண் ஜாதகமும் நன்னப் பொருந்தியிருக்குன்னு சுப்பு கனபாடிகள் கூறிவிட்டார். பையன் பட்டணத்திலே நாற்பது ரூபாய் வேலையிலிருக்கானும். கண்ணுக்கு லட்சணமாயிருப்பானும் —"

"அவாளுக்குப் பூர்வீகம் எந்த ஊர்?"

"பூர்வீகம் கீழனூராம், ஆனு இப்போ கிள்ளுகுடியில் இருக்காளாம். பையன் பாகத்துக்கு நஞ்சையும் புஞ்சையும் சேர்ந்து ரெண்டு வேலி வருமாம்."

"எத்தனை பொண்கள்?"

"இந்தப் பையனைச் சேர்த்து ரெண்டு பிள்ளைகளும், ரெண்டு பெண்களுமாம். பெண்களுக்கெல்லாம் கலியாணம் ஆயிடுத்தாம்."

"பணம் என்ன கேக்கராளாம்?"

"ரொக்கமா ஆயிரம் ரூபா கொடுத்தாப் போருமாம், அதைத் தவிர முன்னூறு ரூபாய்க்கு துணி மணி பாத்திரங்கள் வைத்தால் போதுமாம்."

"அப்படின்னு நம்பகிட்டேருந்து ஆயிரத்தி முன்னூரு ரூபா எதிர்பார்க்கிருப்போலிருக்கே? ரூபாயைக் குறைக்க முடியாதாமா? நல்ல வரன்தான். ஆயிரத்துக்குள்ளே முடிக்கலாமா பாருங்களேன்."

"சொர்ர்ர்—"

கதவிடுக்கின் வழியாக ஆவலுடன் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த சீதாவுக்கு இந்த சத்தத்தைக் கேட்டதும் எரிச்சல் உண்டாயிற்று. ஒரு கரண்டி குளிர்ந்த நீரை எடுத்து பொங்குகின்ற குழம்பின் தலையில் ஊற்றினுள்.

* * * *

இது நடந்து நான்கு நாட்கள் சென்றதும், பிள்ளையும், பிள்ளையின் அக்காவும் தாயாரும் பெண்ணைப் பார்க்க வந்தனர். சீதா எல்லோருக்கும் நமஸ்காரம் பண்ணினுள். சுந்திர தீக்ஷிதர் குறுக்கே விழுந்து "பெண் ரொம்ப அடக்கம், நன்னு சமைப்பாள், நல்ல சூடிக்கை" என்று வர்ணித்துக்கொண்டே சென்றுர். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளை, அக்காவைக் கூப்பிட்டு 'பாடத் தெரியுமோ' வென்று கேட்கச் சொன்னுன். "பொண்ணுக்குப் பாடத் தெரியுமோ" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் பிள்ளையின் அக்காள்.

"சீதாவுக்குப் பாட்டு சுமாராகவரும்; நன்னுத் தெரியாது. இதெல்லாம் பட்டிக் காடுதானே, பட்டண வாசம்னு பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறதுக்குப் பல சௌகரியங்கள் இருக்கும்" என்று சிரித்துக் கொண்டே கூறினுர் சுப்பிணி அய்யர்.

"என்னடி சீதா! ஒரு நல்ல பாட்டா பாடேன்"என்று மெதுவாக உத்திரவிட்டாள் காமாக்ஷியம்மாள்.

அவர்கள் மத்தியில் பாடுவது சீதைக்கு வெட்கமாக இருந்தது. ஆனுல் சின்னம்மா காமாக்ஷி அம்மாளின் கோபத்திற்கஞ்சி, மனதைத் திடப்படுத்திக்கொண்டு "ராமா நீ சமான மெவரு" என்ற கீர்த்தனையைக் கர்நாடகமாகப் பாட ஆரம்பித்தாள். தட்டுத் தடுமாறி முதலடியைப் பாடிவிட்டாள். இரண்டாவது அடிக்கு வந்தும் அவளால் பாடமுடியவில்லை. அவள் கண்களிலிருந்தும் கண்ணீர்த் துளிகள் வெளியில் வரட்டுமா வென்று பயமுறுத்திக் கொண்டிருந்தன. தலையைக் குனிந்து கொண்டே சரேலென்று எழுந்து உள்ளே சென்று தரையில் படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழலானுள்.

சீதா உள்ளே சென்றதைக் கண்டு திடுக்கிட்ட சுப்பிணிய அய்யர்,வந்தவர்கள் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிருர்களேயென்றெண்ணி "கடுமையான வேலை, களைப்பா யிருக்குபோலிருக்கு. அதனுல் தான் அவளால் பாட முடியவில்லை" என்று கூறிக் கொண்டே காமாக்ஷியம்மாளின் முகத்தைப் பார்த்தார். அம்மாளின் கண்கள் அவரை அத்துடன் நிறுத்தும்படி ஆக்ஞாபித்தன. சுப்பிணி அய்யரும் அத்துடன் நிறுத்திக் கொண்டு எதிர் ஜாமின் விஷயமாகப் பேச ஆரம்பித்தார். வெகு நேரம் விவாதம் நடந்தது. பிறகு சுந்தர தீக்ஷிதர், மத்தியஸ்தம்பண்ணி, ரொக்கம், பாத்திரம் பண்டம் வகையருக்களெல்லாம் ஆயிரத்தி நூற்றுக்குக் கிட்டத்தட்ட முடித்து வைத்தார். பின்பு முகூர்த்த நாளை நிச்சயித்துவிட்டுப் பிள்ளை வீட்டுக் காரர்கள் ஊருக்குக் கிளம்பி விட்டார்கள்.

"நல்ல பொண்ணுடி, பேயாட்டமா, அறுத்துப்போன முண்டச்சி மாதிரி அறுவது நாழியும் அழுகைதான் இருக்கு. நீலிக்கி நெத்திலே கண்ணுங்கிற மாதிரி அழுகை. ஒன் அழுகை ஒன்னை நெருப்பிலே வச்சுப் பொசிக்கினுக்கூட போகாது போலிருக்கு. பெரியவா வீட்டுப் பொம்மனுட்டிகள் வந்து பாடுன்னு வாயிலே வரிசையாயிருக்கிற முத்துக்கள் உதிந்து போயிடறதா? மத்த வேளேலே 'காக்கரை மூக்கரைன்னு' கத்தரத்திலே குறைச்சலில்லே. என் மானம் போறது. அரை நாழிக்கு முன்னுடி தொலச்சு முழுகிட்டு மறுகாரியம் பார்க்கணும்" என்று கர்ஜித்துக் கொண்டிருந்தாள் காமாக்ஷியம்மாள்.

அன்று முழுவதும் சீதாவுக்குச் சாப்பாடே இறங்கவில்லை. உள்ளே எல்லாவற்றையும் ஒழுங்காகப் பார்த்து மூடி விட்டுச் சமைய லறையிலேயே தலைப்பை விரித்துப் போட்டுக்கொண்டு படுத்துக் கொண்டாள். இவள் துக்கத்தைக்கண்டுபரிதவித்த

சித்திரா தேவி விரைவில் அவளை நெருங்கி அணைத்துக் கொண்டாள்.

*  *  *

சீதாவுக்கும் கோபாலனுக்கும் குறித்த முகூர்த்தத்தில் கலியாணம் நடந்தேறி யது. கலியாணம் ஐந்து நாட்களும் சுப் பிணி அய்யர் வீடு கலகல வென்றிருந்தது. அக்கிரகாரத்திலுள்ள ஐந்தாறு வீட்டுக் காரர்களும் கலியாண வீட்டிலேயே குடி யேறி விட்டனர். காமாக்ஷி அம்மாள்,பிறர் ஏதாவது குறை கூறப்போகிறார்களே யென்று எண்ணி ஓடியாடிக் காரியங்களைக் கவனித்து வந்தாள்.

கலியாணம் நடந்து மூன்று மாதங்கள் சென்றன. அம்மூன்று மாதங்களில் காமாக்ஷியம்மாளின் நடத்தையில் ஓர் பெரிய மாறுதல் காணப்பட்டது. சுப்பிணி அய்யர் வீட்டிற்கு அவ்வூர்த் தட்டான் தினம் ஒரு தடவையாவது வராமலிருக்க மாட்டான். "என்ன செய்யப் போகிறாள்" என்பதைப்பற்றி சீதாவுக்கு ஒன்றுந்தெரி யாது. காமாக்ஷியம்மாள் ஏதோ ஓர் பெருங் காரியம் செய்யப் போவதாக எண்ணிக் குதூகலமாக இருந்தாள்.

ஓர் நாள் மாப்பிள்ளையிடமிருந்து மனை வியை அழைத்துப்போக வரப்போவதாக ஓர் கடிதம் வந்தது. அக்கடிதத்தை வாசித்த சுப்பிணி அய்யர் அப்படியே ஸ்தம் பித்து நின்று விட்டார். கடிதத்திலுள்ள சமாசாரத்தைக் கேட்ட காமாக்ஷியம்மாள் மனமும் குழம்ப ஆரம்பித்தது. அதை அவள் ஒருவரிடமும் காட்டிக் கொள்ளா மல் உட்சென்றாள். 'கணவன் அழைத்துக் கொண்டு போக வரப்போகிறார்' என்ற செய்தியைக் கேட்டதும் சீதாவுக்குச் சந் தோஷம் பொங்கிற்று. சின்னம்மாளின் பிள்ளை ராமுவை வாரியணைத்து ஆசை தீர முத்தமிட்டு "ராமு, அத்திம்பேர் வரப் போறார் தெரியுமா?" என்றாள்.

"அத்திம்பேரா, அத்திம்பேர் வந்தா, காலணா காசு வாங்கி, மோட்டார் வாங்கி 'பும்பும்'ன்னு விடப்போரேன். ஏண்டி அக்கா, மோட்டார் வாங்கட்டுமா? இல்லாட்டா ரயில் வாங்கட்டுமா? ரயிலே வாங்கரேன் அக்கா. உன்னையும் அத்திம் பேரையும் அதிலே ஏத்திக்கிண்டு பட்ட ணத்திலே கொண்டு விட்டுட்டு 'கோ'ன்னு கத்திண்டு ஊருக்கு வந்துடுவேன்" என்று குதித்துக்கொண்டே கூறினான்.

"ஏண்டா! நீ என்னோடே பட்டணத் துக்கு வரப்போரயா, இல்லாட்டா இங் கேயே இருக்கப் போறயா?" என்று அவ னுடைய பதிலைக் கேட்கும் ஆசையுடன் கேட்டாள் சீதா.

"உன்னோடே தான் வரப்போரேன் அக்கா, இங்கேயிருந்தா அம்மா அடிப்பா" என்று அவளுடைய காதில் பிரகாசித்துக் கொண்டிருந்த தோட்டின் சிவப்புக் கற் களைத் தேய்த்துக் கொண்டே கூறினான் ராமு.

"வாடா என் கண்ணு" என்று சொல்லி அவனைக் கட்டியணைத்துக் கொண்டாள் சீதா.

இதை மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த காமாக்ஷியம்மாள் பெரு மூச்செறிந்தாள்.

*  *  *

மறுநாட் காலை மணி ஒன்பதிருக்கும். வாசலில் ஒரு இரட்டை மாட்டு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மாப்பிள்ளை ஒரு தோல் பையுடன் இறங்கினார். மாப் பிள்ளையைக் கண்டதும் ராமு ஓடோடியும் சென்று "அத்திம்பேரே, எனக்குக் காலணா காசு கொடு, ரயில் வாங்கணும். அக்காவையும் உன்னையும் என் ரயிலில் ஏத்திக்கொண்டு போகப்போரேன்" என்று கூத்தாடிக் கொண்டே கூறினான்.

"கொடுக்கிறேன். காலணாவுக்குப் பதி லாக ஒரு ரூபாய் கொடுக்கிறேண்டா" என்று சொல்லிக் கொண்டே, மாப்பிள்ளை அவன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வாசற்படி ஏறினார்.

மாப்பிள்ளையைக் கண்டதும் சுப்பிணி அய்யர் சிரித்த முகத்துடன் அழைத்து உபசரித்தார். சீதாவோ ஜன்னல் கதவின் இடுக்கின் வழியாகத் தன் கணவருடைய இனிய முகத்தைப் பார்த்துக்கொண்டிருந் தாள்.

"அத்திம்பேரே, அக்கா கூப்பிடரா, வாயேன்" என்று மாப்பிள்ளையைக் கையைப் பிடித்திழுத்தான் ராமு.

"எலே, போக்கிரிப்பயலே வருவார்டா" என்று ராமுவிடம் சொல்லிவிட்டு சுப்பிணி அய்யர் மாப்பிள்ளையைக் குசலப்ரச்னம்

பண்ணினார். சுப்பிணி அய்யர் ஊரில் அம்மா அப்பா எல்லோருடைய சௌக்கியத்தையும் கேட்டுவிட்டு, "எப்பொழுது கிளம்ப நாள் பார்த்திருக்கு?" என்று கேட்டார்.

"அப்பாகிட்டேயிருந்து 'நாளைக்கு அழைத்துக்கொண்டு போ' என்று லெட்டர் வந்தது. நாள் நன்றாயிருக்காம். அம்மா கூட இன்னும் பத்துப் பதினைந்து நாளில் பட்டணம் வரப் போறாளாம்" என்று மாப்பிள்ளை கூறினார்.

"வாயேன் அத்திம்பேரே!" என்று மறுபடியும் ராமு கையைப் பிடித்திழுத்தான். மாப்பிள்ளை சிரித்துக்கொண்டே உள்ளே சென்றார்.

* * *

ரயில்வே ஸ்டேஷனுக்கும் சுப்பிணி அய்யர் இருக்கும் கிராமத்துக்கும் இடையில் ஐந்து மைல் தூரம் இருக்கும். மாலை மூன்று மணிக்குக் கிளம்பினால்தான் ஆறு மணி வண்டிக்குப் போகலாம். வீட்டில் எல்லோரும் மூட்டைகள் கட்டும் வேலையில் மும்மரமாக இருந்தனர். காமாக்ஷியம்மாள் அன்று பைத்தியம் பிடித்தவளைப் போல அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தாள். "சீதா ஊருக்குப் போகப் போகிறாள்" என்பதை நினைத்துக்கொள்ளும்போதெல்லாம் அவளுக்கு சொல்ல முடியாத துக்கம் வந்தது.

அன்று காமாக்ஷியம்மாளே சமைத்தாள். மாப்பிள்ளையும் சுப்பிணி அய்யரும் சாப்பிட்ட பிறகு காமாக்ஷியம்மாள், சீதாவைச் சாப்பிட உட்காரச் சொன்னாள். "நீங்கள் முதலில் சாப்பிட உட்காருங்கள், உங்களுக்குப் போட்டுட்டு அப்பறம் நான் சாப்பிடறேன்" என்று கூறினாள் சீதா. காமாக்ஷியம்மாள் தழதழத்த குரலில் "இல்லை சீதா, இன்னிக்கிக்கூடவா நீ காரியஞ் செய்யணும்" என்று சொல்லிக்கொண்டே இலையைப் போட்டுப் பரிமாறினாள். சின்னமமாவின் முகத்தைப் பார்த்ததும் சீதா மனங்கலங்கிவிட்டாள். இவ்விதம் அன்புடன் கலந்த பேச்சுக்களை அவள் முன்பின் கேட்டதுண்டா?

சாப்பாடு முடிந்ததும் காமாக்ஷியம்மாள் தன் பெட்டிக்குள்ளிருந்து தான் அன்புடன் செய்து வைத்திருந்த அட்டிகையையும் வைர மூக்குத்தியையும் எடுத்து வைத்துக்கொண்டு சீதாவைக் கூப்பிட்டாள். அட்டிகையினாலும், மூக்குத்தியினாலும் அவளுடைய கழுத்தையும் மூக்கையும் அலங்கரித்து, அதனால் உண்டான முகத்தழகைக் கண்டாள். அவளுடைய கண்களில் குப்பென்று கண்ணீர் பெருகியது. தாயாருக்குத் தான் பெற்றெடுத்த குழந்தையின்மேல எவ்வளவு அன்பு ஏற்படுமோ அதைவிடப் பன்மடங்கு அன்பு அவளுக்கு சீதாவின்மேல் ஏற்பட்டது. அவளை இறுகத் தழுவிக்கொண்டாள்.

"சீதா, சீதா, என்மேலே உனக்கு ஏதாவது கோபமுண்டா?" என்று தழதழத்த குரலில் கேட்டாள்.

இவ்வித அன்பான வார்த்தைகள் அவளுடைய வாழ்க்கையில் ஒரு நாளாவது கேட்டதில்லையாகையால் சீதாவின் கண்களிலிருந்து மளமளவெனக் கண்ணீர் பெருகியோடத் தொடங்கியது. "இல்லை அம்மா" என்று துக்கம் நிறைந்த குரலில் கூறினாள்.

"சீதா, நான் இவ்வளவு நாளாக உன்னைக் கடிந்து கூறிய மொழிகளை எல்லாவற்றையும் மறந்து, அவைகளெல்லாம் உன் நன்மைக்குத்தான் கூறினேன் என்று எண்ணுவாயா?" என்றாள்.

* * *

ரயிலுக்குக் கிளம்பும் நேரம் நெருங்கியது. காமாக்ஷியம்மாளே எல்லா மூட்டைகளையும் எடுத்து வண்டியில் வைத்தாள். சீதா ராமுவைக் கலங்கிய முகத்துடன் எடுத்து பல முறை முத்தமிட்டாள். "அக்கா போயிட்டு நாளைக்கு வந்துடயா?" என்று கேட்டான். "வந்துவிடறேண்டா கண்ணு" என்று பரிவுடன் கூறினாள். காமாக்ஷியம்மாள் அவளுடைய கண்ணீரைத் துடைத்துவிட்டு, நெற்றியில் விபூதியிட்டுத் தலையில் வேப்பிலை சொருகி, "சமத்தா இரு, நானும் அப்பாவும் அடிக்கடி வருகிறோம், அழாதே இரு, சுவாமிக்கு நமஸ்காரம் பண்ணு" என்று கூறினாள்.

எல்லோரும் வண்டியில் ஏறினார்கள். "அம்மா போய்விட்டு வரேன். ராமு சமத்தா இரு, உனக்கு ரயில் வாங்கிண்டு வரேன்" என்று தடுமாறிக்கொண்டே

(456-ம் பக்கம் பார்க்க.)

# நாகன்

(ஸ்ரீ. பி. கோதண்டராமன் எம். ஏ., பி. எல்.)

அந்த ஊரில் நாகனை அறியாதவர் ஒருவருமே கிடையாது. அவன் நல்ல உழைப்பாளி; கள்ளம் கபடற்ற உள்ளம். பிள்ளையார் கோயிலுக் கருகிலுள்ள ஆலமரம் நாலாபக்கங்களிலும் படர்ந்து, நிழல் தருவதுடன் ஆயிரக் கணக்கான புள்ளினங்கள் தங்கவும், கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கவும் இடந்தந்து, கைம்மாறு கருதாது அவைகளை ரட்சிப்பதைப் போன்று நாகனும் ஊராருக்கெல்லாம் பரம பரோபகாரியாக விளங்கினன்.

அவனுக்குத் தன் தகப்பனைப்பற்றித் தெரியாது. தாயின் நினைவு மட்டும் அவனுக்கிருந்தது. அவனை அன்புடன் நெருங்கியவர்களுக்கு மட்டும் தனது சிறு ஜாதிக்காய்ப் பெட்டியின் அடியில் வைத்திருந்த இரு பித்தளைக் காப்புகளைக் காட்டுவான். அவைகளை அவனது தாய் அணிந்திருந்தாள். அவளது ஞாபகார்த்தமாக அவைகளைப் பொக்கிஷம் போல வைத்திருந்தான்.

சிறு பிள்ளையா யிருக்கையிலேயே அவன் அநாதையாய் விட்டபடியால் ஊரார் பிள்ளையாகப் பிறர் வீடுகளிலேயே வளர்ந்தான். அவனுக்குத் தெரியாத வேலை ஒன்றுமில்லை. ஊர் ஆடு மாடுகளை யெல்லாம் மந்தைக் கரைக்கு ஓட்டிச் செல்லுவான். வெயில் வேளையில் மாடுகளைக் குட்டையில் நன்றாகக் குளிப்பாட்டுவான். ஊரார் நிலங்களை உழுவான், விதைப்பான், அறுப்பான், மேடுகளைக் மேய்ப்பான்,கொத்துவேலையும் செய்வான். ஊர் மக்கள் எந்த அவசரத்திற்கும் அவனைத்தான் தேடுவார்கள். அவனிடத்தில் அவர்களுக்கு அபார நம்பிக்கை. எதையும் முடியாது என்று அவன் இது வரையில் சொன்னதே கிடையாது. எடுத்துக் கொண்ட வேலையை முழுமனதுடன் செய்வான். அதிகாலையிலிருந்து அஸ்தமனம் வரையில் ஓய்வு ஒழிவின்றி ஊழியம் புரிவான். ஆனால் அவன் வேலை செய்யுமிடத்தில் தனது பசியை யாற்ற மூன்று வேளைகளிலும் கூச்சமின்றிக் கஞ்சி கேட்டுக் குடிப்பான். அது ஒன்றே அவன் ஊராரிடமிருந்து எதிர்பார்த்த ஊதியம். எந்த வேலையில் ஈடுபட்டிருந்த போதிலும் மாலையில் எவ்வளவு நேரமானபோதிலும் பிரதிதினமும் காளியம்மன் கோயிலுக்குப் போகத் தவற மாட்டான்.

நாகன் ஓர் குள்ளன், கோணவாயன், கோணக்காலனும்கூட. கால்விரலும் சேர்ந்திராமல் தனித்தனியாக கோணி யிருந்தன. அவனது நடையும் கோண நடை. இடுப்பில் ஒரு கந்தைத் துணியை தொடைக்குமேல் இழுத்துக் கட்டியிருப்பான். தலையில் கட்டிக்கொள்ளவோ அல்லது உடலைப் போர்த்துக்கொள்ளவோ ஒரு துண்டு இருந்தது. ஒரு வீட்டிற்குள்ளும் அவன் அனுமதிக்கப்படுவதில்லை. கொல்லைப்புறமாகவே சென்று கொல்லை வழியாகவே வெளியே வந்துவிடுவான். மாட்டுக்கொட்டிலில் காலியாயுள்ள இடத்தில்தான் இரவில் படுப்பான்.

அவன்மீது கோபித்துக் கொள்ளுகிறவர்களிடம் அவனுக்கு அதிருப்தி ஏற்படுவதில்லை. 'அடே நாகா, பத்திரம் அம்மாதிரி செய்யாதே. தெரியுமா?' என்று எவர் சொன்னபோதிலும், 'நல்லது சாமி, இனி அப்படிச் செய்வதில்லை, இந்தத் தடவை பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று வினயமாகச் சொல்லி உடனே கீழ்ப்படிவான். அவனது ஸ்வருபத்தைப் பார்த்து இம்சித்தவர்களையும் அவன் நேசித்தான்; ஊரார் எவரும் காலாலிட்ட வேலையைச் சிரமேல்தாங்கிச் செய்வான். பிறருக்கு உபயோகமாயிருப்பதன் பொருட்டு தன் உடல் நலத்தைக் கிஞ்சித்தும் பார்க்க மாட்டான்.

ஒரு நாள் அவன் பழங் கட்டிடமொன்றை இடித்துக் கல்லையும் மண்ணையும் வண்டியிலேற்றிக் கொண்டிருக்கையில் கீழே விழுந்து கூறான கல்லொன்று

கண்ணைக் குத்தி கண் பொட்டையாய் விட்டது. ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்கு பெரிய கற்பாறை யொன்றை முதுகில் தூக்கிச் செல்லுகையில் முதுகில் தீராச் சுளுக்கு ஏற்பட்டது. கட்டிட வேலை செய்கையில் செங்கல் சுமந்து சுமந்து தோள்கள் தழும்பிக் காய்த்தன. கேட்பவர்களுக்கெல்லாம் கிணற்றிலிருந்து நீர் சேந்திச் சேந்தி உள்ளங்கைகள் கொப்பளித்துக் காய்த்தன. ஏற்றம் ஏறி மிதிப்போரின்றி தானே ஒண்டியாகச் சால் பிடித்து கழனிகளுக்கு நாள் முழுமையும் நீர் இறைப்பான். இக்கடினமான வேலைகளையெல்லாம் வயிறு கழுவுவதன் பொருட்டு அவன் செய்யவில்லை. மக்களின் மீதுள்ள அபார அன்பின் மிகுதியாலும் பரோபகார குணத்தாலுமே அவன் செய்து வந்தான்.

நாகன் வாயில்லா ஜீவன்களின்மீதும் அன்பு செலுத்தினன். தான் வேலை பார்த்த வீடுகளிலெல்லாம் மாடுகளுக்கு உரிய நேரங்களில் தண்ணீர், கழுநீர் முதலியன காட்டி, பருத்திக்கொட்டை புண்ணுக்கு முதலிய தீவனம் போடுவான். ஒரு நிமிஷம் ஓய்விருந்தாலும் அவைகளைத் தடவிக் கொடுத்து, சொரிந்து கொடுப்பான். அவன் சென்ற வழியில் சிறு குஞ்சுகள் மரத்திலிருந்து விழுந்து கீழே இருக்கக் கண்டால், அவைகளை மெல்ல எடுத்து மரத்தின்மீதேறி கூடுகளில் சேர்ப்பான். அவனது காலடி சத்தம் கேட்ட புள்ளினங்கள், பூனைகள், நாய்கள் முதலியன அஞ்சி ஓடாமல் பயமற்றிருந்தன.

நாகன் இவ்வண்ணமாக ஊராருக்கு உழைத்து உழைத்து தலை நரைத்தது, கிழத்தனமும் தட்ட ஆரம்பித்தது. வயற்காடுகளில் வேலை செய்வது அவனுக்கு வரவர சிரமமாகத் தோன்ற ஆரம்பித்தது. இடுப்புவலி, தோள்வலி, சகிக்க முடியவில்லை. இந்த நிலையில் அவன் கடைசியாக கிராம முன்சீபு சீனு அய்யரின் வீட்டு வேலைக்காரனாக அமர்ந்தான்.

சீனு அய்யருக்கு அந்த ஊரில் அறுபது காணிகள் நன்செய்யும் முப்பது காணிகள் புன்செய்யும் தோட்டமும் துறவுமிருந்தன. அவர் பெரிய குடும்பஸ்தராயினும் ஊராருக்கெல்லாம் தருமப் பிரபுவாக விளங்கினர். அவரது வீட்டில் நாள்தோறும் குறைந்த பட்சம் இருபது பேர் வெளியார்கள் வந்து சாப்பிடுவார்கள். எந்த ஜாதியாராயிருந்தாலும் பசி என்று வந்தவருக்கு அவர் அன்னம் படைக்காமல் இருக்கமாட்டார். அவரது வீட்டில் எட்டு பணியாட்கள் பற்பல வேலைகளைச் செய்து பிழைத்தனர்.

அவரது வீட்டுப் புறக்கடையிலுள்ள கொட்டிலில் ஐந்து பசுக்கள், மூன்று எருமைகள், ஆறு எருதுகள் இருந்தன. நாகன் அதிகாலையிலெழுந்து மாட்டுத் தொழுவத்தை நன்முகப் பெருக்கித் தண்ணீர் விட்டுக் கழுவுவான். சாணம், பழுதான வைக்கோல், வீட்டுக்குப்பை, தோட்டத்துக் குப்பை எல்லாவற்றையும் கொல்லைக் கோடியிலுள்ள குழியில் போட்டு மேலே மண்ணைத் தூவி விடுவான். அவன் வேலைக்கு வந்தது முதல் வீட்டில் ஈ, பூச்சி என்பதே பேசக் கூடாது. வீட்டை அவன் அவ்வளவு சுத்தமாக வைத்திருந்தான். இவ்வேலை யெல்லாம் ஆனவுடன் வீட்டுப் பொது உபயோகத்திற்காக கிணற்றிலிருந்து நீர் சேந்தி தொட்டி நிறைய நிரப்பி விடுவான். அடுத்தபடியாக பத்துப் பாத்திரங்களை யெல்லாம் பளபளவென்று விளக்கி வைப்பான். லக்ஷ்மி அம்மாள் அன்புடன் அளித்த பழைய அன்னத்தைப் புசித்துவிட்டு பால் கறப்பான். பிறகு சீனு அய்யர் இட்ட வேலையை ஒவ்வொன்முகச் செய்வான். மாலையில் மாடுகள் மந்தையிலிருந்து திரும்பி வந்தபின் ஒவ்வொன்றுக்கும் தண்ணீர் காட்டி கொட்டிலில் கட்டி வைக்கோல் போடுவான். நாகனைக் கண்டதும் மாடுகள் குதூகல மடைந்தன. சில சொரிவதற்காகக் கழுத்தைக் காட்டும். சில அன்பு நிறைந்த கண்களுடன் அவனை நோக்கித் தலையாட்டி அழைக்கும்.

இவ்வண்ணம் பல ஆண்டுகள் கழிந்தன. சீனு அய்யர் சிவலோகம் சென்முர். அவரது மூத்த குமாரனுன சீதாபதி அவரது இடத்திலமர்ந்தான். நாகனும் நாளுக்கு நாள் தளர்ந்து மூப்பெய்தியும் வியாதியால் பீடிக்கப்பட்டும் வந்தான்.

ஒருநாள் வீட்டில் மேளம், வாத்தியம், கச்சேரி, ஊர்க்கும்பல், வெளியூர் விருந்தாளிகள், எல்லாம் மோக்களாவா யிருந்தது. சீனு அய்யரின் மூத்த மகளுக்குத்

திருமண மென்றால் சொல்லக் கேட்பானேன்?

நாகனுக்கும் குஷி பிறந்தது. சீனு அய்யர் முன்னொரு சமயம் அவனுக்கு இனாமாகத் தந்த காஞ்சீபுரத்துப் பட்டுக்கரை வேஷ்டியையும் சரிகை உத்தரீயத்தையும் அணிந்து தானும் கலியாணக் கும்பலின் மத்தியில் கலந்துகொண்டான். அன்றைய தினம் துரதிருஷ்ட வசமாகத் தோட்டக்கார வீரப்பனும் அங்கு வந்து சேரவே, இருவரும் புறக்கடையில் மறைந்து கொண்டு ஆளுக்கு ஒரு மொந்தை புளித்த கள்ளை அப்படியே காலி செய்தனர். நாகனுக்கு வெறி தலைக்கேறியது. தலை கிறுகிறுத்தது. தனக்குத் தெரிந்த தந்தான தில்லானா பாட்டுக்களை யெல்லாம் உரக்கப் பாட ஆரம்பித்தான். மேளமும் சந்தடியும் கொஞ்சம் ஓய்ந்தபோது அவனது ஆடல் பாடல்கள் எல்லோருடைய காதிலும் பட்டன. சீதாபதி அய்யருக்குக் கோபம் வந்தது. அவரது உத்தரவின்பேரில் முனியன் அவனை ஒரு அறை அறைந்து புறக்கடையில் தள்ளிக் கொல்லைக் கதவைத் தாளிட்டான். அன்றைய தினம் முழுதும் நாகன் கொல்லைப் புறத்திலேயே விழுந்து கிடந்தான்.

அடுத்த நாள் காலை போதை தெளிந்து வழக்கம் போலத் தனது தினசரி வேலையைப் பார்க்க ஆரம்பித்தான். கொட்டிலைச் சுத்தஞ் செய்துவிட்டு தண்ணீர் சேந்திக் கொண்டிருந்தான். திடுமென்று கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு வந்தார் சீதாபதி அய்யர்.

“அடே நாகா, நீ வேலை செய்தது போதும். இனி உனக்கு இங்கே வேலையில்லை. இந்த க்ஷணமே நீ வீட்டை விட்டு போக வேண்டும். உன்னைப் போன்ற குடியர்களுக்கு இது இடமல்ல. நேற்று உனது நடத்தையால் என் மானம் போய் விட்டது. உம், போ, நிற்காதே” என்றார்.

நாகனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. வாய் குழறிக் கொண்டே “சாமி, இந்த தடவை மன்னித்துப் போடுங்கள். இனி அம்மாதிரி செய்வதே யில்லை. எல்லாம் வீரப்பன் பேச்சைக் கேட்டுக்கெட்டேன்’ என்று சொல்லி அவர் கால்களில் விழுந்தான்.

“போ என்றால் போகவேண்டும். மறு பேச்சு இல்லை. என் கண்முன் இருக்காதே” என்றார் அய்யர் பிடிவாதமாக.

நாகன் தட்டுத் தடுமாறிக் கொண்டு எழுந்தான். அவனுக்கு இன்ன செய்வதென்று தெரியவில்லை. ஐந்து வருஷகாலமாக ஊழியஞ்செய்து பிழைத்துவந்த வீட்டிலிருந்து எப்படிப் போவது? சீனு அய்யர் தருமப் பிரபு; தீனதயாளு. அவர் சென்றபின் சீதாபதி அய்யர் வேலைக்காரர் களிடம் மிகக் கடுமையாகவே நடந்தார். இரக்கம் என்பதே அவருக்குக் கிடையாது. ஆயினும் அவரது உள்ளம் இளகுமென நாகன் வீணாக எதிர்பார்த்தான். ஒன்றும் பலிக்காமற் போகவே, தனது ஜாதிக்காய்ப் பலகைப் பெட்டியைத் தலை மீது வைத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

வழிநெடுக குழந்தை போல அழுது கொண்டே சென்றான். குடியானவர் தெருவில் நுழைந்து கணக்குப் பிள்ளை லக்ஷ்மணன் வீட்டை யடைந்து, பிள்ளையைப் பார்த்து “அய்யாவே, நான் இந்த வீட்டைக் கட்டுவதற்கு மிகவும் உழைத்திருக்கிறேன். உம்மிடமிருந்து கைம்மாறாக ஒரு சல்லிக்காசு கூடப் பெறவில்லை யென்பதை தாங்கள் அறிவீர்கள். இது சமயம் எனது போதாக் காலத்தினால் திக்கற்றிருப்பதால் எனக்கு ஒரு நாளாவது கஞ்சி ஊற்ற வேண்டும்” என்றான்.

“போடா போ, கஞ்சியுமில்லை கிஞ்சியுமில்லை. எப்பவோ வேலை செய்தானாம், இப்போ வந்து கேட்கிறான்.”

“சாமி, அப்படிச் சொல்லாதேயுங்கள். நீங்கள் வீடு கட்டினபோது மூன்று ஆட்கள் செய்யும் வேலையை நான் ஒண்டியாகச் செய்திருக்கிறேன். செங்கல் சுமந்து என் தோள்பட்டை காய்த்திருப்பதைப் பாருங்கள். நீங்கள் தருமம் செய்யாவிடினும் ஏதாவது வேலை காட்டினால் என்னாலானதைச் செய்கிறேன். அவ்வளவு தான் நான் கேட்பது.”

லக்ஷ்மணப் பிள்ளை “இது ஏது சனியன் விடமாட்டான் போலிருக்கிறதே” என்று சொல்லி, கதவைத் தாழ்ப்பாளிட்டு உள்ளே சென்று விட்டார்.

நாகன் விதியை நொந்துகொண்டே சென்றுன். வழியில் ராமுடு அய்யரைக் கண்டு "சாமி! உங்களது நிலத்தை உழுது பயிரிட்டு அறுத்திருக்கிறேன். உம்மிடமிருந்து நான் யாதொரு ஊதியமும் பெறவில்லை. இது சமயம் உடல்வலியிழந்து திக்கற்றவனு யிருக்கிறபடியால் எனக்கு ஒரு நாளாவது கஞ்சி வார்க்க வேண்டும். என்னுலான காரியத்தையும் செய்வேன்" என்றுன்.

"போடா போ, எப்போதோ வேலை செய்தானும். அதற்கு இப்போது கஞ்சி வேண்டுமாம். நீ எனக்கு ஒரு வேலையும் செய்யவேண்டாம்" என்று விர்ரென்று வேகமாய்ச் சென்றுர்.

இப்படி பல பேர்களைக் கேட்டுப்பார்த்தான். ஒருவரும் அவன்மீது இரக்கங் கொள்ளவில்லை. சீதாபதி அய்யர் வீட்டில் நடந்த விஷயத்தை யறிந்த ஊரா ரெல்லாம் அவனைக் கண்டு குடியன் என வெருட்டித் துரத்தினர். கடைசியாக நன்றிகெட்ட இக் கிராமத்தார் முகத்தில் விழிப்பதில்லையெனப் பிரதிக்ஞைசெய்துகொண்டு அதைவிட்டுப் புறப்பட்டான் நாகன்.

வயற்காட்டில் நடந்து செல்லும்போது ஒருபாழாய்ப்போன குடிசையொன்று அவனுக்குத் தென்பட்டது. அதையடைந்து சற்று இளைப்பாறினுன். பசி காதடைத்தது. பார்வை மங்கியது. கொஞ்சநேரத்திற்குப்பின் இன்னும் அரை மைல் தூரத்தில் ஒரு பட்டிக்காடு இருந்தது ஞாபகத்திற்கு வந்தது. அதை நோக்கித் தள்ளாடிக்கொண்டே சென்றுன். "அம்மா, பசி பொறுக்கமுடியவில்லை. கொஞ்சம் சோறு போடுங்கள்" என்று வீடுவீடாகக் கேட்டான். ஒருவரும் அவனை லட்சியம் செய்யவில்லை. கடைசியாக ஒரு ஏழைக் குடியானவனது குடிசையில் ஒரு பெண்மணி இவனைப் பார்த்து இரங்கிக் கொஞ்சம் கூழ் எடுத்துவந்து அவன் வைத்திருந்த கலயத்தில் வார்த்தாள். "மகாலக்ஷ்மி, நீ குழந்தை குட்டிகளுடன் நன்றுக இருக்கவேண்டும்" என்று வாயாற வாழ்த்தி பழையபடி பாழாய்ப்போன குடிசைக்குத் திரும்பினுன்.

அங்கு சொரி பிடித்த நாயொன்று படுத்திருந்தது. அதைத் தடவிக்கொடுத்து அதற்குத் தன் கலயத்திலிருந்து கொஞ்சம் கூழ் வார்த்தான். தினந்தோறும் இவ்வண்ணமாகவே தான் பிச்சை யெடுத்து வந்த கூழையோ சோற்றையே அதற்கும் கொஞ்சம் போட்டுவந்தான்.

ஒரு நாள் இரவு இடியும், மழையும், காற்றுமாக இருந்தது. நாகனுக்குக் குளிர் பொறுக்க முடியவில்லை. ஜுரம் கண்டது. உஷ்ணம் அதிகரித்துப் பித்தம் தலைக்கேறி என்னென்னமோ பிதற்றினுன்.

அடுத்த நாள் அவ்வழியாகச் சென்ற மாட்டுக்காரப் பையன் ஒருவன் நாகன் பிணமாகப் படுத்திருந்ததைக் கண்டான். உடனே ஓடிப்போய் சீதாபதி அய்யருக்கும் ஊராருக்கும் இதை அறிவித்தான். எவரும் சட்டை செய்யவில்லை. கடைசியாக நாகன் அந்திக் காலத்தில் பிச்சையெடுத்துவந்த பட்டிக்காட்டிலுள்ள பிச்சைக்காரர் சிலர் சேர்ந்து பிணத்தைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றனர். நாகன் குடிசையில் அன்புடன் ஆதரித்துவந்த சொரி பிடித்த நாய் கண்ணீர் விட்டுக்கொண்டே பிணக்கோலத்துடன் சுடுகாடு வரை சென்றது.

---

(452-ம் பக்கம் தொடர்ச்சி)

கூறினுள். வண்டி புறப்பட்டது. சுப்பிணி அய்யர் கன்றைப் பிரிந்த பசுவைப்போல் மதிமயங்கி நின்றுர். வண்டி மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த வெண்கல மணி "போயிட்டு வரேன், போயிட்டு வரேன்," என்று சொல்வதுபோல் ஒலித்தது. வண்டியும் கண்ணுக்கெட்டாத தூரம் சென்றுவிட்டது, மணியொலியும் மங்கிவிட்டது. வண்டி மறையும் வரையில் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த சுப்பிணி அய்யர் கவலை தோய்ந்த முகத்தோடு தன் பார்வையைத் திரும்பிப் பார்த்தார். காமாக்ஷி அம்மாள் ஹிருதயத்தில் அதுவரையில் பொங்கிக்கொண்டிருந்த மகத்தான துக்கம் 'குபீர்' என்று விம்மலாக வெளியே வந்தது.

---

# சகுனம்

(ஸ்ரீ. கே. வெங்கடராமன், பி. ஏ.)

சகுனம் பார்ப்பது என்னும் வழக்கம் நம் நாட்டிலே மட்டுமல்லாமல் உலகத்தில் எல்லாவிடத்திலும் பரவி இருக்கின்றது. சகுனங்களில் பல ரகம் உண்டு. முதலில் நம்நாட்டை எடுத்துக் கொள்ளுவோம். நாம் வீட்டைவிட்டு கிளம்பும்பொழுது எதிரில் ஒத்தைப் பிராம்மணனுவது அல்லது ஒரு விதவையாவது வந்தால் உடனே திரும்பிவிடுகிறோம். வெளியில் புறப்படும் பொழுது "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்கக் கூடாது. மற்றும் ஏதேனும் ஒரு காரியம் தொடங்கும்பொழுது ஒருவரும் தும்முதல் கூடாது. தும்மினுல் காரியம் கைகூடாதாம். அதிலும் ஒத்தைத் தும்மல் தான் கெடுதலாம். இரட்டைத் தும்மல்கள் நல்ல சகுனமாம். இவைகளெல்லாம் போக நல்ல சகுனங்களும் உண்டு. வெளிக் கிளம்பும்பொழுது எதிரில் இரட்டைப் பிருமணர் வருவது, ஓர் சுமங்கலி வருவது, கழுதை கத்துவது, பசு வருவது, முதலியவைகள் எல்லாம் மிகவும் நல்ல சகுனங்களாகக் கருதப்படுகின்றன. சகுனங்களில் நம்பிக்கையுள்ளவர்கள், ஏதாவது நல்ல சகுனம் ஒன்று உண்டாகும் வரையில் வெளிக் கிளம்புவதில்லை. சிலர் முடிவில் தங்களுடைய மனைவியையாவது எதிரில், பக்கத்து வீட்டிலிருந்து வரும் படிச்செய்து வெளிக் கிளம்புவார்களே அல்லாமல், அதற்கு முன்பு வீட்டைவிட்டு நகரமாட்டார்கள்.

எல்லா சகுனங்களையும்விட தும்மல் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. ராகுகாலத்தைப்போல் அதற்கு அவ்வளவு மரியாதை உண்டு. ஒரு காரியம் தொடங்கும்பொழுது தும்மினுல் அக்காரியம் ஒருநாளும் ஈடேறப்போவதில்லை என்பது பண்டை காலம் தொட்டு நம்பப்பட்டு வருகிறது. ஒருசிலர் அதை நன்மையாகவும் கருதுகிறுர்கள்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றுகிய "சிந்தாமணி"யில் நாமகள் இலம்பகத்தில் சீவகன் என்னும் அரசிளங் குழவியை கந்துக்கடன் என்னும் ஓர் வணிகன் எடுக்கும்பொழுது அது தும்ம, அதைப் பார்த்துக்கொண்டிருந்த வனதேவதை அக்குழவியை "சீவ" என்று வாழ்த்திய தாக கூறப்பட்டிருக்கிறது. அக் குழவியினுல் கந்துக்கடன் பிற்காலத்தில் மிகவும் சீரும் சிறப்பும் அடைகின்றுன். அத் தும்மல் நன்மையே செய்ததாயிருக்கிறது. தற்காலமும் ஒரு சிலர் தும்முவதை நல்ல சகுனமாகக் கருதுகிறுர்கள். ஆனுல் பெரும்பான்மையோர் இரட்டைத் தும்மலைத்தான் நன்மை பயப்பனவாகக் கருதுகிறுர்கள். அதனுல் பொடி போட்டுக் கொண்டு தும்மலாமோ என்றுல், அப்பொழுது ஒரு இரட்டைத் தும்மலோடவா நிற்கும்?

மற்றைய தேசத்தவர்களும்கூட தும்முவதை ஓர் சகுனமாகக் கருதுகிறுர்கள். சீன தேசத்தில், ஒருவர் தும்மினுல், அவரைப்பற்றி வேறு யாரோ ஒருவர் நினைத்துப் பேசிக்கொண் டிருப்பதாகக் கருதுகிறுர்கள். அதேமாதிரி நம்மிடையிலும் புரையேறினுல் யாரோ நம்மை நினைப்பதாகக் கருதுகிறோம். எந்தக் காரியம் தொடங்கும்பொழுதும் தும்மினுல் அக்காரியத்தை மறுபடியும் முதலிலிருந்து செய்யத் தொடங்குகிறுர்கள் நம்மில் பலர்.

சயாம் நாட்டில் தும்மல் மிகவும் அதிருஷ்டம் கொடுக்கவல்லது என்று நம்பப்படுகிறது. வங்காளத்தில் ஒருவர் தும்மினுல், உடனே பக்கத்திலுள்ளவர் தலை குனிந்து வணங்க வேண்டுமாம். இது ஒரு வங்காளி நண்பர் சொல்லக் கேள்வி.

ஆனுல் மகம்மதியர்கள் தும்முவதை வெறுப்பதில்லை. ஓர் அபசகுனமாகவும் கருதுகிறதில்லையாம். ஏனெனில், "கடவுள் தும்முவதை விரும்புகின்றுர்" என்று முகமது நபியவர்களே சொல்லியிருக்கின்றுர். நீக்ரோ ஜாதியார்களிடையும் விசேஷமாகக் கவனிக்கப்படுகின்றது இந்தத் தும்மல். ஜமைக்காவிலுள்ள நீக்ரோ ஜாதியர்கள்யாரோ ஒருவர், தும்முகின்றவர்பேரில்,

கோள் சொல்லிக்கொண்டிருப்பதாக நம்புகிறார்கள்.

ஆங்கிலேயர்களிடையும் தும்முதல் கவனிக்கப்பட்டு வருகிறது. இங்கிலாந்தில் வடபாகத்தில் தும்மலின் நன்மை தீமைகளை தும்மும் நாளைக்கொண்டு சொல்லுகின்றார்கள். திங்கட்கிழமை தும்மினால் தும்மினவர்க்கு ஏதேனும் ஆபத்து நேரிடும் என்பதாக நம்பப்படுகிறது. செவ்வாய்க்கிழமை தும்மினால் நன்மையும் இன்பமும் தரக்கூடிய ஒரு விஷயம் நடக்குமாம். புதன்கிழமை தும்மினால் யாரிடமிருந்தோ எதிர்பாராத கடிதம் வருமாம். வியாழக்கிழமை தும்மினால் நல்ல நிலைமை ஏற்படுமாம். வெள்ளிக்கிழமை தும்மினால திங்கட்கிழமையைப்போல, ஒன்று தும்மினவருக்காவது அல்லது அவருடன் நெருங்கிய ஒருவருக்காவது ஏதேனும் தீமை நேர்ந்து, அதனால் தும்மினவர்க்கு மிகவும் துக்கமும் விசனமும் ஏற்படுமாம். சனிக்கிழமை தும்மினால், மறுதினமாகிய ஞாயிற்றுக்கிழமையன்று தத்தமது காதலி காதலர்களைப் பார்க்கலாமாம். ஞாயிற்றுக்கிழமை தும்மினால் ஒன்றும் நன்மையோ தீமையோ ஏற்படாதாம்.

போர்ச்சுகல் தேசத்தார்களிடையும் தும்மல் கவனிக்கப்படுகின்றது. தும்முகின்றவர்களின் பக்கத்திலுள்ள ஆண்கள் தொப்பியை எடுத்து தும்மினவர்க்கு மரியாதை காட்டவேண்டுமாம். இப்பழக்கம் இன்றைக்கும் நாளைக்கும் அவர்களிடையில் கையாளப்பட்டு வருகிறதாம்.

மற்றும் தென்னாட்டில் எதிரில் பால் குடம், தண்ணீர்க் குடம், பிணம் இவைகளெல்லாம் வருவது மிகவும் நல்லதாகக் கருதப்பட்டுவருகிறது. ஆனால் எண்ணெய்க் குடம் வருவதை ஓர் அபசகுனமாகக் கருதுகிறார்கள்.

மற்றும் கிராமங்களிலும், சிறிய ஊர்களிலும் கருட தரிசனத்தை மிகவும் சிறந்த சகுனமாகக் கருதுகிறார்கள். பெரிய நகரங்களில் வசிப்பவர்களுக்கு இவைகளெல்லாம் புதிதாக இருக்கலாம். ஆனால் இவைகள் எல்லாம் உண்மை. இன்றைக்கும், நாளைக்கும் நம்மில் பெரும்பான்மையோர் சகுனம்பாராமல் ஒரு காரியத்திலும் ஈடுபடமாட்டார்கள். ஏதேனும் அபசகுனம் நேர்ந்தால், அக்காரியத்தால் எவ்வளவு பொருள் வருவதாயிருந்தாலும் அக்காரியத்தை மேற்கொள்ளமாட்டார்கள். இது அநுபவத்திலும் உண்மையாக நடக்கின்றது.

கடிதம்

# நகரசபையின் கடமை

ஜன சமுதாயத்தின் தினசரி வாழ்க்கைக்கு அனுகூலமாகப் பலவித வசதிகள் உண்டாக்கப்பட்டு வருகின்ற இக்காலத்தில், போக்குவரவுக்கு வேண்டிய வசதிகள் முற்றிலும் முடிவடைந்ததாக இல்லாமல் குறைவுபாடுள்ளதாகவே இருக்குமாயின், மக்களின் தினசரி வாழ்க்கையானது பாதிக்கப்பட்டுப் பங்கம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. ஆகவே மக்கள் வாழ்க்கை அபிவிருத்தியடைய ஆர்வங்கொண்ட அனைவரும் அந்த இடுக்கண்களைக் களைந்து சமூக தினசரி வாழ்க்கை சௌகரியப்படும் விதமாக நாளுக்கு நாள் பல்வேறு வசதிகளை உண்டுபண்ணுவதே சிறந்த பணியாகும்.

சென்னையின் மத்திய பாகமாகிய ஐகோர்ட்டுக்கு எதிராயுள்ள வெட்டவெளியை பஸ் வண்டிகள் புறப்படும் ஸ்தலமாக ஏற்படுத்திபிருப்பதால், அங்கு அநேகர் அயல் ஊர்களுக்குச் செல்ல வந்து கூடுகின்றார்கள். அவ்வாறு கூடுகின்றவர்களில் பெரும்பாலோர் பெண்களும் அவர்களது குழந்தைகளுமேயாகும். எனவே இவர்கள் கோடைக்காலத்தில் தண்ணீரின்றி தாங்க முடியாத வெப்பத்தாலும், மாரிக்காலத்தில் மழையினாலும், குளிரினாலும் தங்க இடமின்றி தவிக்கின்ற கோரக் காட்சியானது பார்ப்போர் மனதை துயருறச் செய்விக்கின்றதல்லாமல் சென்னை கார்ப்பரேஷனை நிந்திக்கவுஞ் செய்கின்றது. அதோடு பெண்கள் வெளிக்குப் போகத் தகுந்த மறைவான இடமின்றி அச்சப்படுவதோடு அவஸ்தைப்பட்டுப் பிணிக்குள்ளாகின்றார்கள். ஆண்களோ தங்கள் கடன்களைக் கழித்துக் கொள்ளும்பொருட்டு அவ்விடத்திலேயே அசுத்தம் செய்வதோடு, ஆடவர்களையும் அவமதிக்கின்றார்கள். ஆகவே அவ்விடம் சுத்தமாயிருக்கவும், மக்கள் நலத்தைக் கோரியும் சென்னை கார்ப்பரேஷன் அவசியமும் அவசரமுமாக இது விஷயத்தில் கவனஞ் செலுத்த வேண்டுகின்றேன்.

—பி. கே. ராவ்.

# இலக்கியக் கட்டுரை

(ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன்)

தமிழில் இலக்கியக் கட்டுரைகள் எழுதி வர வேண்டுமென்று பத்திரிகாசிரியர் கேட்கிறார். ஆங்கிலம் முதலிய பாஷைகளில் இலக்கியக் கட்டுரை என்பதற்கு உள்ள பொருள் வேறு. தமிழர் கொள்ளும் பொருள் வேறு. எந்த விஷயத்தைப் பற்றியும் ரஸமாக எழுதினால் அதுவே இலக்கியக் கட்டுரையாகும். தமிழிலோ இலக்கியத்தைப்பற்றிய கட்டுரை எழுதினால்தான் அது இலக்கியக் கட்டுரையாகும். இலக்கியமென்றால் என்ன? இதைப் பற்றித் தமிழிலே வரையறையான கோட்பாடு இல்லை. இலக்கணமல்லாத நூல்களெல்லாம் இலக்கியங்களே. நூல்களைப்பற்றி ஆராய்ந்து எழுதினால் அதை இலக்கியக் கட்டுரையென்று தமிழர் சொல்லுகிறார்கள். மற்ற நாட்டார் எதை ஆராய்ச்சி யென்று சொல்லுகிறார்களோ அதைத்தான் இவர்கள் இலக்கியக்கட்டுரை யென்கிறார்கள். புறநானூற்றிற் கண்ட அரசியல், அகநானூற்றிற் கண்ட காதல் வாழ்வு, சங்கநூல்களிற் கண்ட பெண்கள் நிலை-இப்படி நூல்கள் சம்பந்தமாக ஆராய்ந்தெழுதினால் தமிழர் யாவரும் இதுதான் இலக்கியக் கட்டுரை யென்று கூடித் தலை யசைப்பார்கள். ஆங்கிலத்திலுள்ளவைபோல முருங்கைக்காய் சாம்பார், ரவிக்கைச் சண்டை, நடை, உரையாடல் முதலிய விஷயங்களை எழுதினால் அவைகளுக்கு வேறு வேறு பெயர் வைத்து விடுகிறார்கள். முருங்கைக்காய் சாம்பாரை அடிப்படையாக வைத்து மனிதனுடைய சுவை யுணர்ச்சியைப்பற்றி ஹாஸ்யத்தோடு ஒரு கட்டுரை யெழுதிப் பத்திரிகைக்கு அனுப்பினால் அது விகடப் பகுதியிலே பிரசுரிக்கப்படுகிறது. உலாவப் போதலைப்பற்றி எழுதினால் ஆரோக்கியப் பகுதியிலே சேர்த்துக் கொள்ளுகிறார்கள். கதையாக எழுதினாலோ, இலக்கியமே இல்லை; கதை யென்று சொல்லி விடுகிறார்கள். ஆங்கிலத்தில் மட்டும் இவை இலக்கியங்களாவதேன்? தமிழருக்கு இவை இலக்கியத்துக்குப் புறம்பாக நிற்பதேன்?

முருங்கக்காய் சாம்பாரைப்பற்றி எழுதுவது ஹாஸ்யத்திலேதான் சேர்க்க வேண்டுமென்று தமிழர் வற்புறுத்துகிறார்கள். அதே விஷயத்தைப் பாட்டாகப் பாடிவிட்டால் அது கவியாகி இலக்கியப் பகுதியில் புகுந்து கொள்ளுகிறது. கதையோ, வேடிக்கையோ ஏதானாலும் சரி, பாட்டாகிவிட்டால் அதற்கு இலக்கியமென்னும் பெயர் கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வித்தியாசம்?

தமிழருடைய இலக்கியம் விஷயத்தில் இல்லை; பாட்டிலேதான் இருக்கிறதென்று அதற்குள் நிச்சயம் செய்து விடாதீர்கள்.

ஆராய்ச்சிக் கட்டுரையும் பாட்டும் இலக்கிய மென்பதனோடு அவர்கள் நிற்கவில்லை. சங்கநூற் செய்யுளிலே ஒன்றை வசனமாக எழுதுங்கள். அது இலக்கியப் பகுதியிலே சேர்க்கப்படுகிறது. "ஓகோ! அது பாட்டிலிருந்து வந்தது; இலக்கியத்தின் மாறுவேஷம்" என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படியானால் முருங்கைக்காய் சாம்பார்ப் பாட்டு ஹாஸ்யத்தின் மாறு வேஷமல்லவா? அது மட்டும் வசனமாக இருந்தால இலக்கியமாகாமல் பாட்டானால் மட்டும் இலக்கியமாகி விடுகிறது. சங்கச் செய்யுள் பாட்டானாலும் வசனமானாலும் இலக்கியமாகவே இருக்கிறது. இந்தப் பக்ஷபாதம் எதற்கு?

உண்மைதான் என்ன? தமிழர்களுக்கு இலக்கிய உணர்ச்சியே இல்லையா? இலக்கியம் எழுதுபவர்களுடைய பூண்டே தமிழ்நாட்டில் அற்றுவிட்டதா?

இலக்கியக் கட்டுரை யெழுதுவதென்பது அறிஞர்களுக்கு அவ்வளவு பிரமாதமான சங்கதியல்ல. விஷயங்களைக் காரண காரிய முறையோடு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்குத் தாங்கள் கருதியவற்றை அழகாக எழுதத் தெரிந்தால் அவர்கள் எழுதுவது இலக்கியக் கட்டுரைதான். வாசிப்பவர்களுக்குப் புரியாத பாஷையிலோ, தலை

சுற்றும் வியவகாரங்கள் நிறைந்த முறையிலோ எழுதினல் அவற்றைப் பொதுவாகக் கட்டுரைகளென்று கூடச் சொல்லக் கூடாது.

கட்டுரை, கதை, கவி எழுதுவது கலைத் திறமையுடையவர்களால் தான் முடியும். கதை இன்னது கவியின்னதென்பதைத் தமிழர்கள் இப்பொழுது ஒருவாறு அறிந்திருக்கிருர்கள். கதையைப் பற்றி அவர்களுடைய அபிப்பிராயம் நல்ல உருவத்தை யடைந்திருக்கிறது. அதற்குக் காரணம் சில பத்திரிகைகளேயாகும். கவி யென்ருல் அதன் ஸ்வரூபமே வேருக இருக்கிறதாதலின் அதையும் சுலபமாக அறிந்து கொள்கிருர்கள். தமிழில் இன்னும் வசனக் கவிதை வரவில்லை; ஆதலின் பேச்சுக்கும் எழுத்துக்கும் எத்தனை வித்தியாச மிருக்கிறதோ அத்தனை வித்தியாசம் கவிக்கும் வசனத்துக்கும் இருக்கிறது.

கட்டுரைகள் இன்ன வென்பதைப்பற்றி யாரேனும் தமிழரைக் கேட்டுப் பாருங்கள். கதையும் கவியும் அல்லாத எல்லாம் கட்டுரைகளென்று அவர் சொல்வார். இரண்டாம் வகுப்பில் பையன் எழுதும் 'விளக்கெண்ணெ'யைப் பற்றிய 'காம்போஸிஷனும்' கட்டுரை தான்; தினசரி பத்திரிகையின் தலையங்கமும் கட்டுரைகள் தான்; வ. வெ. சு. ஐயர் எழுதிய 'காவியம்' என்பதும் கட்டுரைதான். "இவைகளில் இலக்கியக் கட்டுரை எது?" என்ற விஷயந்தான் அவர்களுக்குப் புரியாதது. இப்படியே தமிழ் நாட்டை விட்டு வைத்திருப்பது பெரிய பாவமல்லவா? அறிவாளிகள் இலக்கியக் கட்டுரைகளை எழுதாமல் எத்தனை நாள் இருக்கப் போகிருர்கள்?


ஒரு விஷயம்: இலக்கியக் கட்டுரைகளை எழுதுகிருேமென்று எண்ணிக் கொண்டிருக்கும் இரண்டு வகையினர் இப்பொழுது இங்நாட்டில் இருக்கிருர்கள். ஒருவகையார் பரம வைதீக கோஷ்டி. அவர்களுக்கு நிகழ்கால மென்றும் எதிர்கால மென்றும் இரண்டு இல்லை. எல்லாம் பழைய காலத்துச் சமாசாரந்தான். பொறுமை, பொருமை, கற்பு, அஹிம்ஸை முதலிய விஷயங்களைப்பற்றி ஆயிரம் பாட்டுகளை மேற்கோள் காட்டி எழுதிக் குவித்து விடுவார்கள். உலகம் சிருஷ்டியான காலந் தொடங்கி இன்றளவும் திருப்பித் திருப்பி அந்த விஷயங்களைப் பற்றியே எழுதிக் கொண்டிருக்கும் அந்த 'அப்பாவி'களுக்கு இலக்கியக் கட்டுரை இன்னது என்று படும்படி விளக்கிச் சொல்ல யாராலும் முடியாது.

மற்ருெரு வகையார் அதிவிருஷ்டி வகையினர். தங்கள் கருத்து எதுவோ அதுதான் சிறந்ததென்று பிடிவாதத்தோடு எழுதுகிருர்கள். காரணங் காட்டிப் படிப்பவருடைய மனசைக் கவ்வும்படி எழுதத் தெரிந்தாலும் கோணல் வழியிலே போகிருர்கள். கருத்துக்குச் சிறப்பே யொழியப் பாஷைக்குச் சிறப்பில்லை யென்று சீர்திருத்த வாதம் செய்கிருர்கள். தங்கள் எழுத்திலேதான் 'ஜீவசக்தி' ததும்புவதாகப் பறையடித்துக் கொள்கிருர்கள். ஆனல் பாவம்! அவர்கள் செய்யும் குற்றம் அவர்களுக்கே தெரிவதில்லை.

மேனுட்டு ஆசிரியர்களுக்கும் நம் நாட்டு எழுத்தாளர்களுக்கும் அடிப்படையான வித்தியாசம் ஒன்றுண்டு. அவர்கள் தங்கள் மொழியிலுள்ள இலக்கிய நூல்களைக் கரை கண்டவர்கள்; மரபு வழுவாமல் எழுதத் தெரிந்தவர்கள். நம் நாட்டிலோ எழுத்தாளர்களுக்குத் தமிழ் இலக்கியத்தின் ஒரு மூலை கூடச் சரிவரத் தெரியாது. அங்ஙனம் தெரியாததைப் பெருமையாகக் கூடப் பேசிக்கொள்ளுகிருர்கள். "என்னுடைய குழந்தை நாலெட்டுக்கூட நடக்கமாட்டான்; ரிக்ஷாவிலேதான் போவான்!" என்று பெருமை பேசிக் கொள்ளும் தாய்மாரும், "வீசம் படி யரிசிக்குமேல் நமக்குச் செல்வதில்லை" என்று பீற்றிக்கொள்ளும் கனவான்களும் இருக்கின்ற இந்த நாட்டிலே பலஹீனங்களையெல்லாம் பெருமைப்படுவதற் குரியவையாகச் சொல்லும் மனப்பான்மை இருப்பது ஆச்சரியமில்லை.

ஒருவர் சொல்லுகிருர்: "என்ன ஐயா! உங்கள் பழைய தமிழ்ப் புஸ்தகத்தில் வீட்டைச் சந்திர மண்டிலத்தில் மூட்ட விட்டிருக்கிருர்கள். சோலையை ஆகாய கங்கையில் மிதக்க விடுகிருர்கள். எங்கே பார்த்தாலும் பெண்கள் வருணனை? இந்த உபயோகமற்ற புஸ்தகங்களை மனுஷன் எப்படிப் படிப்பான்?"

(464-ம் பக்கம் பார்க்க)




## குழந்தையின் கதை

(ஸ்ரீ எஸ். எல். நாராயணன், பி. ஏ.)

ஒரே ஒரு ஊரில் ஒரு இடையன் இருந்தான். அவனுக்கு ஒரு பிள்ளை இருந்தது. அதற்கு நாலு வயதிருக்கும். தான் ஆடு மேய்க்கப் போகும்போது, தன் பிள்ளையையும் தூக்கிக்கொண்டு போவான் இடையன். காட்டில் பிள்ளைக்குத் துணை அவன் வளர்த்துவந்த நாய்தான். அதன் பெயர் டைகர். டைகரும் குழந்தையும் சிநேகமாயிருந்தன. குழந்தை டைகரின் மேல் ஏறிக்கொண்டு விளையாடும். குழந்தைக்கு தன் தாயாரைப் பற்றிய நினைவே இல்லை. அதற்கு டைகர்தான் வேண்டும்.

ஒருநாள், காட்டில் இடையனுக்குத் தூக்கம் வந்தது. டைகரை குழந்தைக்குக் காவல் வைத்துவிட்டுத்தூங்கினான். குழந்தையும் டைகரும் விளையாடிக்கொண் டிருந்தன. சிறிது நேரம் கழித்து, இடையன் எழுந்திருந்தான். ஆடுகளில், ஒரு குட்டி குறைந்திருப்பதைக் கண்டு, கோபங் கொண்டான்; உடனே, தடியால் டைகரை அடித்தான். அடி தாங்கமுடியாமல் டைகர் கீழே விழுந்தது. பின் குழந்தையுடன் வீட்டுக்குப் போனான். டைகரைக் காணாமல் குழந்தை அழ ஆரம்பித்தது. இடையன் எவ்வளவு சமாதானப் படுத்தியும், குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்தும் அவனால், அழுகையை நிறுத்த முடியவில்லை. மறுநாள் குழந்தைக்கு ஜுரம் கண்டது. அழுகையைக் காணோம். குழந்தை செத்துப்போகும் என்று நினைத்தான் இடையன். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பக்கத்து வீட்டுக்காரர்கள் வைத்தியரிடம் காண்பிக்கும்படி கூறினார்கள். அவனிடம் அப்பொழுது ரூபாய் ஒன்றும் கிடையாது. இருந்தாலும், குழந்தையை எடுத்துக்கொண்டு வேகமாய் நடந்தான். சிறிது தூரம் கழிந்ததும், டைகர் சக்தியற்று நகர்ந்து வருவதைக் கண்டான். தன் எஜமானனைக் கண்ட டைகர் குலைத்தது. டைகரின் சப்தம் கேட்டதும் குழந்தை திடீரென, இடையன் தோளிலிருந்து கீழே இறங்கியது; சில நிமிஷங்களில் "டைகர், டைகர், வா, வா" என்று கூப்பிட்டுக்கொண்டே, டைகரை நோக்கி ஓடியது குழந்தை. இதைக் கண்டதும், இடையனது துக்கமெல்லாம் பறந்துவிட்டது. டைகருடன் வீட்டுக்கு வந்தான் இடையன். வந்ததும் அடுத்த தெரு பலவேசம், காணாமற்போன ஆட்டுக் குட்டியை கொடுத்தான். குட்டி தெரியாமல், அடுத்த மந்தையில் சேர்ந்து விட்டது. அது இடையனுக்குத் தெரியவில்லை. அப்பொழுதுதான் தான் டைகரை அடித்தற்காக வருந்தினான்.

குட்டியைக் கண்டு ஆட்டுக்குச் சந்தோஷம்; டைகருக்கு வேண்டிய ஆகாரம் கிடைத்தது; துள்ளிக் குதித்தது. அதைக்கண்டு குழந்தை சிரித்தது; காய்ச்சலையும் காணோம். குழந்தையைக் கண்டு இடையன் சிரித்தான். அவனைக் கண்டு, ஆடுகள் கத்தின. **கதையும் முடிந்தது.**




## ஹிட்லருக்கு சனி பலம்

ஜாதக ரீதியாக சனி கெடுதலும் செய்வான்; நல்லதும் செய்வான். சனிக்கிழமையன்று சனிப்பீரிதி செய்வது நம் நாட்டில் வழக்கம். ஹிட்லருக்கு சனிக்கிழமைதான் நல்ல யோகம்போல் இருக்கிறது. அன்றுதான் அவருக்குக் காரியசித்திபோல் இருக்கிறது. பின்வரும் ஜாப்தாவைப்பார்த்தால் அது விளங்கும்.

1934-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி சனிக்கிழமை ஹிட்லர் நாஜிக்கட்சியை சீர்ப்படுத்தி ஜெர்மனியின் சர்வாதிகாரி ஆனார்.

1935-ம் வருஷம் மார்ச் மாதம் 16-ம் தேதி சனிக்கிழமை தேசமெங்கும் படை சேர்க்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

1936-ம் வருஷம் மார்ச் மாதம் 17-ம் தேதி சனிக்கிழமை ரைன் பிரதேசத்தை ஆக்கிரமித்தார்.

1938-ம் வருஷம் மார்ச் மாதம் 12-ம் தேதி சனிக்கிழமை ஹிட்லரின் துருப்புகள் ஆஸ்டிரியாவில் பிரவேசித்தன.

1938-ம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ம் தேதி சனிக்கிழமை ஜெர்மன் சேனை ஜெக்கோஸ்லோவேகியாவில் பிரவேசித்தது.

## பிரிட்டனின் செல்வாக்கு மூன்று வருஷங்களுக்கு முன்

இதாலி அபிஸீனியாவின் மீது படையெடுத்ததற்காக இங்கிலாந்தும் பிரான்ஸுமாகக் சேர்ந்து 47 தேசங்களைக் கூட்டி இதாலிக்குப் பொருளாதார உதவி செய்யக் கூடாது என்று கட்டுப்பாடு செய்தது.

## இன்று

சர்வாதிகாரிகளின் பேராசையைத் தடுக்க இன்று ஒரு தேசத்தைக்கூட அவர்களால் சேர்க்க முடியவில்லை. ரஷியா ஒன்றுதான் தனியாக சர்வாதிகாரிகளை எதிர்த்து நிற்கிறது.

இனிமேல் பிரிட்டனுக்கு உலகத்தில் செல்வாக்கு கிடையாது.

—லாயிட் ஜார்ஜ்

## நாஸிஸம் அல்லது தேசீய அபேதவாதம்

கம்யூனிஸத்தில் கடவுள் கிடையாது; நாஸிஸத்தில் கடவுள் உண்டு. ஆனால் அந்தக் கடவுளுக்கும் கிருஸ்துவக் கடவுளுக்கும் சம்பந்தமில்லை. "கடவுளும் அவர் தீர்க்க தரிசி, ஹிட்லரும்" என்பது "அல்லாவும், அவரது நபி முகம்மதும்" என்பதைப்போல ஒரு முழக்கம். மகம்மதிய மதத்தைப்போல நாஸிஸமும் வாளால் வளர்ச்சிபெறும்நோககம் கொண்டது. அந்தக் கொள்கையில் ஈடுபடாதவர்கள் பொது உத்தியோகங்களில் இருக்க முடியாது. ஆஸ்டிரியாவை ஜெர்மனியுடன் சேர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டவர்களில் கூட கத்தோலிக்கர்களாய் இருந்தவர்கள் கஷ்டத்திற்கு உள்ளானார்கள். கத்தோலிக்கர்களான பழைய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் தண்டனை ஏற்பட்டது.

யூதர்கள் மட்டும் சர்வகலாசாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்பதல்ல; கத்தோலிக்கர்களாயிருந்தவர்களும் வெளியேற்றப்பட்டார்கள். ஐரோப்பாவிலேயே மிகவும் பிரசித்திபெற்ற இன்ஸ்பிரக் ஸ்தாபனம் என்ற சர்வகலாசாலை ஆசிரிய ஸ்தானமும் எடுக்கப்பட்டுவிட்டது. இது எதற்காக? நாஸிஸம் மத சம்பந்தமாக வேலை செய்கிறது என்று தானே அர்த்தம்?

"நாஷனல் சோஷலிஸம்" என்பது ஒரு மத இயக்கம் இல்லையென்றால் இளைஞர் கிருஸ்து மதத்தைப் பின்பற்றுவதை என் தடுத்து, ஞாயிற்றுக்கிழமை காலைகளில் ராணுவப் பயிற்சி கொடுத்து பிரார்த்தனை செய்யும் உரிமையைப் பறிக்கிறார்கள்?

'இங்கிருக்கும் இளைஞர்கள் கத்தோலிக்கர்களும் அல்ல; பிராடஸ்டண்டுகளும் அல்ல; ஜெர்மனியர்கள். தலைவரிடம் நம்பிக்கை என்பதுதான் அவர்களை ஒன்று படுத்துகிறது. தந்தையர் நாடு என்ற உணர்ச்சியே அவர்களை பந்தப்படுத்துகிறது...ஹிட்லர் ஜாதித் துவேஷம் என்ற சைத்தானை வென்றார். சென்ற பதினைந்து வருஷங்களில் சிலுவையின் கஷ்டங்களை அனுபவித்தார். ஹிட்லர்

தான் நமது அவதார புருஷன். அவரை நம்பினவர்கள் கடவுளை நம்பினவர்கள் ஆவார்கள். ஹிட்லரைப் பின்பற்றுங்கள். அதுதான் கடவுளின் உத்தரவு,' என்று வாலிபர் விழாக்களில் பிரசங்கங்கள் நடக்கின்றன. இவைதல்லாம் என்ன? நாஸிஸம் ஒரு மதம் என்பதற்கு அத்தாட்சிகள் தானே?

—கத்தோலிக் உலகம்

## சமாதானத்திற்குக் காரணம் யார்?

ஐரோப்பாவை யுத்தத்தில் அழுந்தாமல் தடுத்தது சேம்பர்லேன் அல்ல, ஹிட்லர் அல்ல, முஸோலினி அல்ல. டாக்டர் பினிஷ் தான் ஐரோப்பாவைக் காப்பாற்றினர்.

அவர் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் போதும்; ஒரு தப்பு செய்திருந்தால் போதும்; அவசரமாக ஏதாவது செய்கைசெய்திருந்தால் போதும்; எதிரிகள் கேலி செய்ததற்குப் பதிலாக ஒரு கோப வார்த்தை சொல்லியிருந்தால் போதும்; ஐரோப்பா ரணகளமாயிருக்கும்.

ஆனல் பினிஷ் அந்த வார்த்தைச் சொல்லவில்லை; எந்தக் கட்சி கேலிக்கும் அவர் பதில் சொல்லவில்லை.

உலக சரித்திரத்தில் ஜெக் பிரஜைகளைப் போல இது வரையில் யாரும் இப்பேர்ப்பட்ட தியாகம் செய்யவில்லை. இதற்குக் காரணம் டாக்டர் பினிஷ்.

அமைதியாகவும் தைரியமாகவும் அவர் இருந்ததால்தான் உலகம் பிழைத்தது.

—டேய்லி ஹெரால்ட்

## சந்ததிகளுக்குக் கடிதம்

"இந்த சம்புடம் நன்றாய்த் தூங்கட்டும். 5000 வருஷங்களுக்குப் பிறகு தூக்கத்திலிருந்து எழுந்ததும், அது வரப்போகும் சந்ததிகளுக்கு ஒரு சிறந்த பரிசாக அமையட்டும்"

இந்த வார்த்தைகளோடு 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் 23 தேதியன்று 5000 வருஷங்கள் கழித்துத் தோன்றும் தலைமுறைக்கு எழுதப்பட்ட ஒரு கடிதத்தை சம்புடத்திற்குள் போட்டார்கள்.

இந்த சம்புடம் சாமான்யமானதல்ல. அது 'டார்பீடோ' ரூபத்தில் உள்ளது. அது விசேஷமான உலோகங்களைக் கொண்டு செய்யப்பட்டது; அது ஏழரை அடி நீளமும், எட்டு அங்குலம் சுற்றளவும் கொண்டது; 800 பவுண்டு நிறை உடையது. மிகவும் பளுவான 'இந்தக் கடிதம்' போடப்பட்ட போஸ்ட் ஆபீஸ் என்னவென்றால் இனிமேல் நியூயார்க் உலகப் பொருட்காட்சி கூடப் போகும் வெஸ்டிங்ஹவுஸ் என்ற இடம் தான். இந்தக் கடிதம் பூமியிலிருந்து கீழே 50 அடி ஆழத்திற்குத் தான் செல்கிறது; ஆம், அங்கே தான் புதைக்கப்படுகிறது. ஆனல் செல்லும் தூரம் குறைவாயிருந்தாலும் போய்ச் சேருவதற்கு 5000 வருஷங்கள் பிடிக்கும். அதாவது 5000 வருஷங்கள் கழித்து அதை நம் சந்ததிகள் தோண்டி எடுத்து நமது நாகரீகத்தை அறியலாம்.

பூமிக்குள் புதைக்கப்பட்டிருக்கும் இந்தக் கடிதத்தை ஒன்றும் அழிக்க முடியாது. ஏனென்றால் பித்தளை, வெள்ளி குரோமியம் முதலிய உலோகங்களால் இச்சம்புடம் செய்யப்பட்டிருக்கிறது. சமுத்திர ஜலம் அதைக் கெடுக்காது.

'சந்ததிகளுக்கு எழுதப்பட்ட' இந்தக் கடிதம் பத்திரமாக இருப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. 6938-ம் வருஷத்தில் உள்ள சந்ததியார்கள் தங்கள் 'முன்னேர்'கள் வாழ்ந்து வந்த விதத்தையும் அவர்கள் நாகரீகத்தையும் இதனால் தெரிந்துகொள்வார்கள். ஆம்; இந்த சம்புடத்தில் நமது நாகரீகத்தைத் தெரிவிக்கக்கூடிய பொருள்களும் புஸ்தகங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. 1938-ம் வருஷத்தில் பெண்கள் தலையில் அணியும் 'ஹாட்' ஒன்றும் அச்சம்புடத்தில் இருக்கிறது. தானியங்களையெல்லாம் சிறு குழாய்களில் அடைத்து பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

சம்புடத்திலிருக்கும் முக்கியமான விஷயம் மூன்று நியூஸ் ரீல்கள் அல்லது செய்திப் படங்களும், ஆயிரம் அடி நீளமுள்ளதும் ஒரு கோடிக்கு மேலானதுமான வார்த்தைகள் அடங்கியுள்ள ஒரு ரீலும். இந்த விஷயங்களை ஒரு தூரதிருஷ்டக் கண்ணுடி வழியாகப் படித்து விடலாம் அல்லது ஒரு சினிமாக் கருவி வழியாகத் திரையில் பார்க்கலாம். அந்த சினிமாக் கருவி செய்யும் வகையும் படரூபமாக அதிலேயே காண்பிக்கப்பட்டிருக்கிறது. 70-ம் நூற்றாண்டிலுள்ள விக்ஞானி இந்தக் கடிதத்தைப் படிக்க ஒரு வருஷம் செல்லும். கடிதத்தைப் படித்து விஷயங்களைக் கிரஹித்துக்கொள்ள பத்து வருஷங்கள் பிடிக்கும்.

ஐயாயிரம் வருஷங்கள் கழித்து ஆங்கிலம் பேசுவார்களோ மாட்டார்களோ என்பதற்காக இந்த சம்புடத்திலேயே ஆங்கிலம் தெரிந்துகொள்ளும் வகை கூட சொல்லப்பட்டிருக்கிறது. நமது கலைகளையும் விக்ஞானத்தையும், பழக்க வழக்கங்களையும் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள், உலகப் பஞ்சாங்கங்கள் பிரசித்தி பெற்ற நாவல்கள் இவைகளைப்பற்றி ஒரு 'காட்லாக்'கும் இருக்கிறது, நல்ல படங்களைப் படம் பிடித்து

வைத்திருக்கிறார்கள். ரயில் ஆகாய மார்க்கங்களும், உலகப் பத்திரிகைகளும் படம் பிடித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த சம்புடம் புதைத்து வைத்திருக்கும் இடத்தையும், எடுக்கும் விதத்தையும் பற்றி எழுதி உலகத்திலுள்ள சகல புத்தசாலைகளுக்கும் அனுப்பியிருக்கிறது. இவைகளில் ஒன்றுவது சந்ததிகள் கையில் அகப்பட்டால் இப்பொக்கிஷத்தைக் கண்டு பிடிப்பார்களல்லவா?

—கட்டுரை

## ஆரோக்கியத்துக்கான ஆகாரம்

உயிருக்கு ஆதாரம் சூரியன். சூரியனிடத்திலிருந்து பரவும் "வைடமின்" 'ஏ'யுள்ள சக்தியை, மரம், செடி, கொடிகள்தான் பூக்கள் கிரகிக்கின்றன. ஆகையால் மரக்கறி, பழங்கள், கொட்டைகள் இவற்றில்தான் ஆரோக்யத்தைக் கொடுக்கும்படியான சத்து இருக்கிறது என்று நிர்த்தாரணம் செய்யலாம். மாமிசத்தில் அவ்வளவு "வைடமின்" இல்லையென்றே சொல்லலாம். ஏனெனில், மிருகங்கள் "வைடமின்"னில் கொஞ்சம் பாகம் தான். அவைகள் உட்கொள்ளும் புல், பூண்டு, முதலிய ஆகாரங்களிலிருந்து சேர்த்து வைத்திருக்கின்றன.

'காட் லீவர் ஆயிலில் சிறிதளவுதான் தாவரங்களின் சத்து இருக்கிறது. மாமிசத்தால் தான் "அபெண்டிஸிடிஸ்" (குடல் அனுபந்த நோய்) என்ற வியாதி உண்டாகிறது.

நாம் பாலைப் பொங்கவைத்தாலோ, அல்லது ஆகாரத்தைச் சமையல் செய்தாலோ, 'வைடமின்' 'ஸி' போய்விடுகிறது. ஆனால் சீமைத் தக்காளியையும், "காரட்டை"யும் சுட்டால், அவைகள் சத்தை இழக்கிறதில்லை. எல்லா மரங்களிலும் தாவரங்களிலும் "வைடமின்" 'ஏ' 'டி' 'ஸி' மூன்றும் இருக்கின்றன. இவைகளில் எதை வேண்டுமானாலும், எடுத்துக்கொள்ளலாம். சூரிய வெளிச்சத்தில் 'வைடமின்' 'இ' இருப்பதால், ஐரோப்பா முதலிய குளிர் தேசங்களில் இருப்பவர்களைப் போலல்லாமல், நம் தேசத்தவர்களுக்கு மேற்படி வைடமின் 'ஈ' அதிகமாக உண்டு. அரிசியையும், கோதுமையையும் நன்றாக தேயவிடப் படாது. அரிசி, காய், கறி, முதலியவைகளுடன் சமையல் செய்து மிகுந்த ஜலத்தை வீணாக்கக்கூடாது. காய், கறிகளைப்போல், அதிலும் தேகாரோக்யத்துக்கேற்ற வஸ்து இருக்கிறது. நன்றாகத் தேயாத அரிசி, புதிய பழங்கள், கொட்டைகள், காய்கறிகள், சமையல் செய்யப்படாத பச்சை ஆகாரங்கள் முதலியவைகள் ஆரோக்கியத்திற்கு மிகவும உகந்தவை. பழங்களை, அவைகளின் சத்தை அடைவதற்கு, பசியோடிருக்கும் போதுதான் உட்கொள்ள வேண்டும். பாலை அதிகநேரம் காய்ச்சலாகாது. அது பிராணவாய்வுடன் கலக்காமல் இருப்பதற்காக எப்போதும் மூடியே வைத்திருக்கவேண்டும். காபி, டீ முதலிய லாகிரி வஸ்துக்கள் தேகாரோக்கியத்தைக் கெடுப்பவைகளே யொழிய, பலத்தைக் கொடுப்பவைகளல்ல.

—டாக்டர் துரஸ்வாமி முதலியார்.

---

(460-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவர் குறை கூறும்பொழுது "ஐயோ! இலக்கியங்களை இவர் காமாலைக் கண்ணோடல்லவா பார்த்திருக்கிறார்!" என்று இரங்கத்தான் வேண்டியிருக்கிறது. "நீங்களே இலக்கிய சிருஷ்டி செய்யத் தொடங்குங்களேன்" என்று சொல்லிவிட்டாலோ, "ஆமாம்" என்று சப்புக்கொட்டுகிறார். தமிழைத் துருப்பிடித்த பாஷையாக, தமிழ் இலக்கியத்தை மக்கிப்போன பண்டமாக எண்ணுகின்ற பெரியவர்களால் இனி நமக்கு விடிமோட்சம் வரப்போவதில்லை. தேச பக்தி யென்றும் பாஷாபிமான மென்றும் ஜபித்துக் கொண்டிருக்கும் சில அறிவாளிகள் கொஞ்சம் பழைய தமிழ்ப் புஸ்தகங்களைக் கசப்பிருந்தாலும் புரட்டிப் பார்க்கட்டுமே. அவை என்ன நம்மைக் கடித்துவிடுமா? தமிழிலுள்ள இலக்கியங்களின் பெயர் கூடத் தெரியாத எழுத்தாளர்கள் எத்தனை பேர் இந்தத் தமிழ்நாட்டில் 'ஆசிரியர்' களாக இருக்கிறார்கள்! அவர்கள் இலக்கியங்களிற் புகுந்து பார்க்கட்டும். தமிழ் மரபை உணர்ந்து புதுத் தமிழர்களுக்குத் தெரிவிக்கட்டும்!

தமிழ் மரபு பிழையாமல் புத்தம் புதிய முறையில் எழுத முன்வரட்டும். அப்போது எத்தனை இலக்கியக் கட்டுரைகள் வெளிவரும்! எந்தக் கட்டுரை யெழுதினாலும் இப்பொழுது ஆங்கிலத்தின் மணம் வீசும் அவர்களுடைய கட்டுரைகளில் தமிழ் மணம் வீசு மென்பதில் தடையென்ன?